
கொழும்பு, பம்பலப்பிட்டி

ஸ்ரீ புதிய கதிர் வேலாயுத சுவாமி கோவில்

# கும்பாபிஷேக மலர்

பிரசோற்பத்தி வருடம் தை மாதம் 25 ஆம் நாள்

(09-02-1992)



255.32
கதிர்

கொழும்பு, புதிய கதிர்வேலாயுத சுவாமிகோவில்

தர்மகர்த்தா சபையால் வெளியிடப்பட்டது

பம்பலப்பிட்டி

ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுதர்
சுவாமி கோவிலின் ஆதி மூலவர்

சங்க நூலகத்
அவர்கள் நன்கொடையாக அளித்



வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும்
வேழமுகனின் எழில் மிகுதோற்றம்


பம்பலப்பிட்டி
ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுதர்
சுவாமி கோவிலின் அறங்காவலர்



திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார்



மேன்மை தங்கிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச
அவர்களின் வருகை



**FROM THE PEEDAM OF SATGURU SIVAYA SUBRAMUNIYASWAMI**

Kauai Aadheenam. 107 Kaholalele Road, Kapaa, HI 96748 USA Fax (808) 822 - 4361

To The trustees of the New Kathiresan Temple in Colombo, and Mr. Thurairajah.

Many blessings for the Kumbhabhishekam for the New Kathiresan Ganesha Temple. We are extremely pleased with the religious service you have performed in designing and building a temple for Lord Ganesha to inhabit. The world as it is today in most countries of the world needs His presence more than ever before, at this time in the Kali Yuga Your spiritual strength and that of all those who have helped in this endeavor deserves nothing but praise.

Our newspaper. "Hinduism Today." stands ever ready to help in any way it can to support your efforts. We are especially eager that the next generation learn and practice their Hindu religion with the same spirit and fervor that the generation that preceded them exemplified.

Blessings from this and inner worlds,

**Satguru Sivaya Subramuniyaswami,**
Jagadacharya Natha Sampradaya, Guru Maha Sannidhanam, Kauai Aadheenam.

# S. Thondaman. *M.P.*

## Minister of Tourism & Rural Industrial Development



*MESSAGE*

*I am very happy that the New Kathiresan Temple is able to have a Mandalapishkam on the 28.03.1992 to commemorate the Construction and Consecration of the Temple.*

*It is heartening that this Hindu Temple has been re-consecrated at this stage when there is need for urgent revival of Hindu Temples for worship. This will also be a boon to the people of the area. It is a temple which is patronised not only by Hindus but also by devotees of other religions.*

**S. THONDAMAN**
*MINISTER OF TOURISM & RURAL INDUSTRIAL DEVELOPMENT*

# கைத்தொழில் இராஜாங்க அமைச்சரும், இ. தொ. கா. பொதுச் செயலாளருமான மாண்புமிகு எம். எஸ். செல்லசாமி அவர்கள் விடுத்துள்ள ஆசிச் செய்தி



இலங்கையும், இந்தியாவும் இருவேறு நாடுகளாக இருந்தபோதிலும், சமய, கலாசார, பண்பாடு ஆகியவற்றில் நீண்டகால பொதுப் பாரம்பரியத்தைக் கொண்டவை. பௌத்தமத சிறப்பினைக் கூறும் நூல்கள் தமிழ்மொழியிலும், இந்துமத தத்துவார்த்தங்களைக் கூறும் நூல்கள் சிங்கள மொழியிலும் வெளியாகியிருக்கின்றன.

இந்துக்கள் புத்தபெருமானைப் போற்றுவதும், பௌத்தர்கள் இந்துக் கடவுள்களான விஷ்ணு, முருகன், விநாயகர் ஆகியோரின் தெய்வச் சிலைகளைத் தங்களது விகாரைகளில் வைத்து வழிபடுவதும் காலம் காலமாக இருந்துவரும் பொதுப்பழக்கவழக்கங்களாகும். வட இந்தியாவில் பிறந்த புத்தபெருமானுக்கு இலங்கையில் முதன்மையும், முக்கியத்துவமும் அளிக்கிறார்கள். "கண்டிக் கதிர்காம வேலா" என்ற தேவார வாக்கிற்கு அமைய தமிழக மக்கள் முருகப் பெருமானைத் தரிசிக்கக் கதிர்காமத்திற்கு யாத்திரை வருகிறார்கள்.

இந்த மரபுக்கேற்ப இந்த நாட்டில் வாணிபத்தொடர்பு கொண்டிருந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் முருகப் பெருமானுக்குக் கோயில் அமைத்து, கோபுரம் கட்டி, கும்பாபிஷேகம் செய்து தங்களது இறைபக்தியை நிலைநாட்டினர். தலைநகரில் புகழ்பரப்பிக் கொண்டிருக்கும் புதிய, பழைய கதிரேசன் கோவில்கள் இச்சமுக மக்களின் புகழ்கூறும் சின்னங்களாகும்.

பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிரேசன் கோயிலுக்குத் தனிச்சிறப்பு உண்டு. அக்காலத்தில் கொழும்பிலிருந்து கதிர்காமம் செல்வதென்றால் அது மிகவும் கடினமானதொரு செயலாகும். நாட்கணக்கில் கால்நடையாக யாத்திரை செய்ய வேண்டும். கதிர்காம உற்சவகாலத்தில், தீர்த்தோற்சவ தினத்தன்று கதிர்காமத்திலிருந்து தீர்த்தம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோவில் முருகப்பெருமானுக்கு அபிஷேகம் செய்து பின்னர் செட்டியார்தெரு ஆலயத்திற்கு சுவாமி ஊர்வலம் திரும்பும். ஆகவே "வேல் விழா" என புகழ் பெற்றது. இதனால் இக்கோவிலுக்கு உபய கதிர்காமம் என்ற பெயரும் உண்டு.

இத்தகைய சிறப்புக்குரியதான இவ்வாலயம் இப்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகமும் முடிந்துள்ளது. நாட்டில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலையில், இத்தகைய நல்ல நிகழ்ச்சிகள் நடைபெறுவது நல்லதோர் முயற்சியாகும். முருகப்பெருமானின் அருளால் நாட்டில் அமைதியும், சமாதானமும், ஐக்கியமும் ஏற்பட வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

## இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர்.
## மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களின்

# வாழ்த்துரை



பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிரேசன் கோவில் மகா கும்பாபிஷேக நிறைவினையொட்டி வெளியிடப்படும் இச்சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

தமிழகத்திலிருந்து பொருள்தேடுமுகமாக பிறநாடுகளுக்குச் சென்ற நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூக மக்கள், தமது பாரம்பரியத்தை மறவாது மொழியையும் சமயத்தையும் பெரிதும் போற்றி வந்தார்கள். அந்த வகையில், இலங்கையில் குடியேறிய நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினர் தீவின் பலபாகங்களிலும் பல ஆலயங்களை அமைத்து தமிழ்ச் சமூகம் ஒன்றுபட வழிவகுத்தனர். அவர்களது பெயரை நிலைக்கச் செய்யும் வண்ணம் இன்று தலைநகரில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்கிறது. ஆலயத்துடன் மூவாயிரம் பேர் அமரக்கூடிய மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஐம்பொன்னினால் ஆக்கப்பட்ட, அம்பாள், முருகன், வள்ளி, தெய்வானை, சமயகுரவர் நால்வர் சிலைகளும் புதிய ஆலயத்தில் இடம்பெற்றுள்ளன.

ஆலயத்தின் பிரதம தர்மகர்த்தா திரு. ஆர். எம். பழனியப்பச் செட்டியார் அவர்களின் வழிநடத்தலில், இவ்வாலயம் இன்று கொழும்பு வாழ் இந்துக்களுக்கு ஒரு புனிதமும் பெருமையும் தருகின்ற சொத்தாகக் கிடைத்துள்ளது. சமயப் பணியையும் சமூகப் பணியாகக் கருதி பெருந்தொண்டு புரிகின்ற நாட்டுக் கோட்டை நகரத்தாரின் நற்பணிகளும், சேவைகளும் மென்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இவ்வாலயத்திலே எழுந்தருளியிருக்கின்ற இறைவனான முருகப்பெருமானின் நல்லருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

# கொழும்பு பிரதி மாநகர முதல்வர் மாண்புமிகு க. கணேசலிங்கம் ஜே. பீ. யூ. எம். அவர்கள் விடுத்துள்ள ஆசிச் செய்தி



"கோவிலில்லாத ஊரில் குடிபுகாதே" என்பது பழமொழி. பிரதானமாக கொழும்பு நகரில் வாழும் மக்களுக்கும் கோவில்கள் அத்தியாவசியம். பம்பலப்பிட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய கதிரேசன் கோவில் கொழும்பு மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். இவ்வளவு அழகான, நவீன வசதிகளுடனான கோவிலை கொழும்பு மாநகரத்தில் கட்டிக் கொடுத்த நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினருக்கும் பிரதானமாக ஆர். எம். பழனியப்ப செட்டியாருக்கும், கொழும்பு மாநகர மக்களின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இக்கோயிலின் கும்பாபிஷேகம் 9-2-92 இல் கோலாகலமாக நடந்தேறியது. அப்புண்ணிய விழாவில் கலந்து கொண்டு விநாயகப் பெருமானின் ஆசியைப் பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

வெளியிடவிருக்கும் இம்மலருக்கு ஆசிச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன். இக்கோவிலைத் தங்கள் சொந்தென நினைத்து, தெய்வ சன்னிதி என்று மதித்து அதை அசுத்தப்படுத்தாது சேதப்படுத்தாது புனிதமாக வைத்திருப்பதே மக்கள் இக்கோவிலின் தர்மகர்த்தாக்களுக்கு செய்யும் நன்றிக் கடனாவதுடன் அக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்கும் செய்யும் தொண்டாகும்.

*க. கணேசலிங்கம்*

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய தர்மகர்த்தா

## திரு. டி. எம். சுவாமிநாதன் அவர்களின்

# வாழ்த்துரை



பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிரேசன் கோவில் கொழும்பு மாநகரில் அமைந்துள்ள திருக்கோவில்களில் பழமையானதொன்றாகும்.

இத்திருக்கோவில் சென்ற நூற்றாண்டில் நாட்டுக் கோட்டை நகரத்தாரினால் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் இக்கோவில் உபய கதிர்காமம் என்ற நாமத்தைப் பெற்றிருந்தது. கதிர்காமத்திற்குச் செல்ல இயலாத பக்தர்கள் இங்கு வந்து வழிபட்டனர். இக்கோவிலில் விநாயகர், நாகதம்பிரான், இடும்பன் ஆகிய மூர்த்திகள் ஆரம்பத்தில் இருந்தன.

1958 ஆம் ஆண்டளவில் திரு. ஆர். எம். பழனியப்பச் செட்டியார் தர்மகர்த்தாவாக இருந்த காலத்திலிருந்து இக்கோவிலில் பல திருத்த வேலைகள் நடைபெற்றன. இவ்வாலயம் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைப் பகுதிகளில் வாழும் இந்து மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரும் துணை புரிந்து வருகின்றது.

இப்பொழுது மீண்டும் திரு. பழனியப்பச் செட்டியாருடைய தலைமையில் கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியுள்ளது.

திரு. ஆர். எம். பழனியப்பச் செட்டியாரின் முயற்சியினாலும், விநாயகப் பெருமானின் திருவருளினாலும் இக்கோவில் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு கொழும்புத் தலைநகரில் சிறந்து விளங்குகின்றது.

டி. எம். சுவாமிநாதன்

# கொழும்பு இராமநாதன் இந்துக் கல்லூரி அதிபர் திருமதி ரூபவதி சிவகுருநாதன் அவர்களின்

# வாழ்த்துரை

*கொழும்பு மாநகரின் மத்தியில் எழிலுடன் விளங்கும் புதிய ஸ்ரீ விநாயகர், கதிர் வேலாயுத சுவாமிகள் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகம் பூர்த்தியாகும் வேளையில் இச்சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மன மகிழ்ச்சியடைகிறேன்.*

*நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் வர்த்தகத்திற்காக இலங்கைக்கு வந்தபோதிலும் பல ஆலயங்கள் அமைத்து வழிபட்டனர். இக்கோவிலில் ஆரம்பத்தில் வேல் வைத்து பின்னர் பல தெய்வங்களை எழுந்தருளச் செய்து வழிபட்டனர். 1972 ஆம் ஆண்டு இவ்வட்டாரத்தில் நவக்கிரகங்கள் இல்லாக்குறையை நிவர்த்தி செய்ய இவ்வாலய முன்றலில் நவக்கிரகங்களை எழுந்தருளச் செய்தனர். செட்டி நாட் வங்கிக் கிளையின் நிர்வாகத்தராக 1943 ஆம் ஆண்டு வந்ததன் வைசிய குலத்தினரான திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் அவர்கள் இன்றுவரை சமயத்திற்கு மட்டுமல்ல கல்விக்கும் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார். இன்று புதிய ஸ்ரீ விநாயகர், கதிர் வேலாயுத சுவாமி கோவில் வியத்தகு விசாலங்கொண்டு யாவரையும் தன்பால் ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. இம்மாபெரும் பணிக்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் அவர்களே. தலைநகரில் அதுவும் கொழும்பு தெற்கில் தற்பொழுது பெருந்தொகையான இந்து மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு மிகவும் வசதியாக வழிபடுவதற்கு சிறந்த ஒரு தலமாக இவ்வாலயம் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.*

*எங்கள் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரிக்கும், இந்துக் கல்லூரிக்கும் ஐந்து ஏக்கருக்குமேல் நிலம் வழங்கி கலைமகளுக்கு காணிக்கை செய்துள்ளார். இத்தொண்டின் மூலம் தமிழ் பிள்ளைகள் கல்விகற்க வழிவகுத்துள்ளார். அத்துடன் "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்ற பாரதியாரின் பாடலில் கல்வியும் கடவுள் நினைப்பும் இணைய வேண்டுமென்று கூறியதற்கு ஒப்ப எமது கல்லூரிக்கு நிலம் கொடுத்தது மட்டுமல்ல ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தை அமைத்துத் தந்ததன் மூலம் மாணவிகளைச் சமய நெறியில் ஈடுபட உதவியுள்ளார். பரந்த நோக்கில் கல்விக்கும், சமயத்திற்கும் தொண்டாற்றிய இப் பெருமகனை நீடூழி வாழ வாழ்த்தி மேலும் எம்கல்லூரிக்கும் கோவில்களுக்கும் தொண்டாற்ற வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். விநாயகப் பெருமானும், கதிர் வேலாயுத சுவாமிகளும் எல்லோருக்கும் வேண்டும் வரங்களை அளித்து, வாழ்வு சிறப்புற அருள்பாலிப்பார்களாக.*

உ
சிவமயம்

## விநாயகக் கடவுள் துதி

*திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் - செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்*
*காதலால் கூப்புவர்தம் கை*

நிலவளமும், நீர்வளமும் ஒன்றிணைந்து மெருகூட்டும் இயற்கை எழில்மிகு ஈழவள நாட்டின் மணிமகுடமென விளங்கும் கொழும்பு மாநகரின்கண் வாழ்வோரையும் வாழ்வுதேடி வருவோரையும் வளம் பல பெருக்கி வாழ்வித்து இறையுணர்வூட்டி இன்னல்கள் அகற்றி இன்ப வாழ்வு தரும் கொழும்பு மாநகர் ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுத சுவாமிகோவில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பிரஜோற்பத்தி வருஸம் தை மாதம் 26ம் திகதி (9-2-92) ஞாயிற்றுக்கிழமையும் பூர்வ ஷட்டி திதியும், ரேவதி நட்சத்திரமும் அமிர்தயோகமும் சந்திரபுத ஹோரையும் அமைந்த ராஜசகுன வேளையும் கூடிய காலை 8 மணி 43 நிமிஷம் முதல் 10 மணி 14 நிமிஷம் வரையில் வரும் மீனலக்கின சுப முகூர்த்தத்தில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினரின் அயராத முயற்சியினால் மகா கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலித்தார். இந்தக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கோவிலின் வரலாற்றுச் சிறப்பினை யாவரும் அறியும் வண்ணம் சமர்ப்பிப்பதில் பெருமையடைகிறோம்.

# ஆலய தோற்றம்

“திரைகடலோடியும் திரவியம் தேட வேண்டும்” என்ற நோக்குடன் ஈத்தல், காத்தல், வகுத்தல் என்ற கோட்பாடுகளுடைய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் இறையுணர்வும், பக்திப் பெருக்கும் கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதற்கு அவர்கள் சென்ற இடமெல்லாம் ஆலயங்களும், மடங்களும், கல்விக்கூடங்களும் நிறைந்து திகழ்ந்து வருவது சான்றாகும்.

வர்த்தக நோக்கோடு எழில் மிகு இலங்கை மாநகர் வந்து குடியேறிய நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினர் “அவனின்றி அணுவும் அசையாது” என்று திடமாக நம்பிய அவர்கள் உள்ளத்தில் “கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்ற ஔவையாரின் வாக்கு உறுத்தவே தீராத பக்திப் பசியினால் சென்ற இடமெல்லாம் ஆலயங்கள் அமைத்துச் சிறப்பித்தனர். இவற்றில் ஒன்றாக கொழும்பு செட்டியார் தெருவில் 1839ம் ஆண்டு ஸ்ரீ புதிய கதிரேசன் ஆலயத்தையும் அமைத்தனர். அவர்களது நீண்டநாள் ஆவலும் பூர்த்தியடைந்த நிலையில் மேலும் ஆலயத்திற்கு மெருகூட்ட அயராது உழைத்தனர்.

அக்காலத்தில் ஆடி மாதத்தில் கலியுக வரதனாம் கதிர்காமக் கந்தனைத் தரிசிப்பதற்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் விழா ஆரம்பிப்பதற்கு ஒருமாதம் முன்னதாகவே காவடி தாங்கி பாத யாத்திரை செல்வது வழக்கம். இன்றுபோல் அன்று இல்லை. எத்தனையோ ஆபத்துக்களையும், தடைகளையும் தாண்டியே யாத்திரையைத் தொடர வேண்டியிருந்தது. கதிர்காமக் கந்தன்மேல் கொண்ட பக்தி வைராக்கியத்தினால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது “வேழமுகன் தம்பியே சரணம்” என்று கூறிக்கொண்டு பயணத்தைத் தொடருவார்கள். இந்த யாத்திரையில் பல இன மக்களும் சேர்ந்துகொள்வர்.

பயந்த தனி வழிக்குத் துணையாக வரும் வேலவன் அவர்களுக்கு ஒரு விக்கினமும் வராமல் தன்னிடம் கொண்டு சேர்ப்பான். பக்திப் பரவசத்தினால் மாணிக்க கங்கையில் தோய்ந்தெழும் பக்தர்கள் மூவினையும் அற்றவர்களாய் ஆறுமுகன் பாதங்களைப் பரவிநிற்பார்.

இப்படியான பாதயாத்திரைகள் பன்நெடுங்காலமாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் சில பல தடங்கல்கள் காரணமாக இந்தப் பாதை யாத்திரை தடைப்படவே சொல்லொணாத் துயருற்ற நாட்டுக் கோட்டை சமூகத்தினர் எப்படியாவது கதிர்காமக் கந்தனை வரவழைத்து அவன் அருள்பெற வேண்டுமென்ற திடமான நம்பிக்கையுடன் செயல்பட்டனர்.

வேல் ஒன்றினை உருவாக்கி வைத்து "உபய கதிர்காமம்" என்று பெயர் சூட்டி ஆடிவேல் விழாவினைக் கொண்டாடி மகிழ்ந்தனர். ஓரளவேனும் தமது எண்ணம் நிறைவேறியதையிட்டு அகமகிழ்ந்த நாட்டுக்கோட்டை சமூகத்தினர் தர்மகர்த்தா சபை ஒன்றினை நிறுவி ஆலய வளர்ச்சிக்கான ஆக்க பூர்வமான வேலைகள் பற்றி ஆராய்ந்தனர். அதன் பிரகாரம் 1988ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15ம் திகதி கூடிய தர்மகர்த்தா சபையில் 1988ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20ம் திகதி பாலஸ்தாபனம் செய்வதாக முடிவு செய்யப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின்படி 1988ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19ம் திகதி மகாயாகம் நடைபெற்று 1988 ஏப்பிரல் 20ம் திகதி திட்டமிட்டபடி நவாலியூர் பிரதிஸ்டா சிரோமணி பிரம்ம ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் பாலஸ்தாபனக் கிரியைகள் நடைபெற்றன. ஆலய பிரதம குருக்கள் ஜே. நாகராஜா சர்மா மாணிக்க விநாயகர் ஆலய பிரதம குருக்கள் பிரம்ம ஸ்ரீ பா. சிற்சபேச (மணி) குருக்கள் ஆகியோர் இவருக்கு உதவியாக கிரியைகளை நடாத்தினர்.

## திரு. ஆர் எம். பழனியப்பா செட்டியாரும், தருமகர்த்தா சபையும்

'செட்டி நாட்' வங்கி 'செட்டி நாட் கார்ப்பரேசன்', பல நாடுகளில் இயங்கி வந்த போதிலும் அதன் தலைமையலுவலகம் இந்தியாவிலேயேயிருந்தது. திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் இலங்கையிலுள்ள 'செட்டிநாட்' வங்கிக் கிளையின் நிர்வாகத்தராக நியமிக்கப்பட்டு 1943ம் ஆண்டு நம் நாட்டில் காலடியெடுத்து வைத்தார். அந்த நாள் உண்மையிலேயே இலங்கையிலுள்ள ஆலய வளர்ச்சிக் குறிப்பேடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்நாளென்று கூறினாலும் மிகையாகாது.

கடமையில் கண்ணாக இருந்த போதிலும் அவருடைய மனம் பெரும்பாலும் இறைவழியிலேயே சென்றது. இறையருளில் அசைக்க முடியாத ஆணித்தரமான நம்பிக்கை வைத்திருந்த அவர் செட்டியார் தெருவிலுள்ள ஸ்ரீ புதிய கதிரேசன் கோவிலையும், பம்பலப்பிட்டியிலமைந்த ஸ்ரீ புதிய கதிரேசன் ஆலயத்தையும் மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற அவாவினால் உந்தப்பட்டவராய் அடியார்கள், அன்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவ்வப்போது புனருத்தாபனம் செய்து வைத்தார். இறை தொண்டிலேயே பெருவிருப்புடைய இவரை 1958ம் ஆண்டு தாமகர்த்தா சபை உற்றதலைவராக ஏற்றுக் கொண்டது. அன்று பதவியேற்ற அவர் இன்றுவரையும் தம்பணியிலும் தன்பொறுப்பிலிருந்தும் சிறிதளவேனும் தளராது தன் பணியைச் செய்து வருகின்றார். இவர் தன் பணியை திறம்பட மேற்கொள்வதற்கு தர்மகர்த்தா சபை அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்பும் ஒரு முக்கிய காரணம் என்று கூறினாலும் மிகையாகாது.

பம்பலப்பிட்டியில் அழகிய வேலைப்பாடுகளுடனும் சகல வசதிகளுடனும் தற்பொழுது கம்பீரமாகக் காட்சியளிக்கும் கொழும்பு நகர் ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுதப் பெருமான் ஆலயம் இவர்களின் தன்னலமற்ற சேவையை எடுத்தியம்புகிறது.

1958ம் ஆண்டு திரு. ஆர். எம். பழனியப்பபா செட்டியார் தர்மகர்த்தா சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற காலகட்டத்தில் ஆலயத்தில் விநாயகர், இடும்பன், நாகர், ஆகிய மூன்று தெய்வங்களுமே வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆனால் மேலும் பல விக்கிரங்களை அமைத்து பூரண ஆலயமாக்கப்பட வேண்டுமென சபை எண்ணியது. இதுவே பழனியப்பச் செட்டியாரின் பெரும் அவாவாகவும் இருந்தது. பழம் நழுவிப் பாலில் வீழ்ந்ததுபோல் தாமகர்த்தா சபையின் ஒத்துழைப்புக் கிடைத்ததுதான் தாமதம் மேலும் கோவிலை அபிவிருத்தி செய்ய முற்பட்டார். நவக்கிரகங்களும் அமைக்கப்பட்டன. நவக்கிரங்கள் மகா பலிபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்டன. காசியிலிருந்து காசி லிங்கம், (இதனை திரு. பழனியப்ப செட்டியாரின் மகள் திருமதி மீனாட்சி வினைதீர்த்தான் அவர்களால்) காசியிலிருந்து கொண்டுவரப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டது. அம்பாள், ஆவுடையார் ஆகிய தெய்வங்கள் மிதுலைப்பட்டியிலிருந்து கொண்டுவரப்பட்டன.

1981ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி கூடிய தர்மகர்த்தா சபை 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் திகதி அஷ்ட்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்வதெனத் தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தின்படி 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி நயினாதீவு பிரம்ம ஸ்ரீ சி. பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் விரும்பியே அருளும் விநாயகப் பெருமானின் பேரருளால் பலன் பெற்றோர் பலர். அவரை நாடி பக்தர்கள் கூட்டம் தேடிவர ஆரம்பித்தது. பக்தர்களின் கூட்டத்திற்கும், சரியான முறையில் கிரியைகளை நடாத்துவதற்கும் தற்போதைய இடம் போதுமானதல்ல என்பதனை அநுபவவாயிலாகக் கண்ட தர்மகர்த்தா சபையினர் ஆலயத்தை புனருத்தாபனம் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்த உடனேயே செயல்பட ஆரம்பித்தனர். அந்த முயற்சி இவ்வளவு குறுகிய காலத்திற்குள் முற்றுபெற்றமைக்கு விநாயகப் பெருமானின் பேரருளும் துணை நின்றுள்ளது என்று கூறிடினும் வியப்பதற்கில்லை.

ஆலயத் திருப்பணி வேலைகளில் மாத்திரம் கவனம் செலுத்தாது, முத்தமிழையும் போற்றி வளர்க்க வேண்டுமென்ற ஒப்புயர்வற்ற எண்ணத்தினால் உந்தப்பட்ட தர்மகர்த்தா சபை விழா மண்டபம் ஒன்றையும் அமைப்பதென 21-10-1972 ஆம் திகதி முடிவு செய்து புதிய கதிரேசன் மண்டபத்தை சகல வசதிகளுடன் செய்து முடித்தது. இந்தக் கலைக் கோவிலை அமைத்த நாட்டுக் கோட்டை சமூகத்தினர் முத்தமிழுக்கும் புத்துயிர் அளித்துள்ளனர். கலை வடிவமாகவும் இறைவனைக் காணும் அவர்கள் இதனை அமைத்ததில் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினரை முற்றும் முழுவதுமாக் கொண்ட அங்கத்தினரைக் கொண்ட தர்மகர்த்தா சபை இந்த நாட்டிற்கு ஆற்றிவரும் தொண்டுகளையிட்டு நாம் பெருமைப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். சொந்த வீட்டை மட்டுமன்றி புகுந்த வீட்டையும் பொலிவுடன் விளங்கச் செய்யும் இவர்கள் பணி அவர்களுடைய தாராள மனப்பான்மையையே எடுத்துக் காட்டுகிறது.

இன்று கொழும்பு மக்கள்யாவரும் பெருமை கொண்டு மூழ்கி இன்ப வாழ்வு வாழ்வதற்கு முற்று முழுவதும் தம் பணத்தை செலவழித்து கடமையாக உருவாக்கிய கொழும்பு பம்பலப்பிட்டி மாநகர் ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் சகல இன மக்களும் தங்கள் இன்னல்களைப் போக்கி இறையருள் பெற வழிசமைக்குமென்றும் கூறலாம்.


புதிதாக அமைக்கப்பட்ட கோவிலின் அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. மூலஸ்தானத்தில் வேழமுகன் வீற்றிருக்க அருகில் அவன் தம்பி வேலவன் உடனிருக்க அதற்குச் சற்றுப் பின்னால் வசந்த மண்டபத்தில் ஐம்பொன்னினால் உருவாக்கப்பட்ட வினாயகர், அம்பாள், வள்ளி - தெய்வயானை, நடராஜர், இடும்பன் ஆகிய தெய்வங்களுடன் மற்றும் சமயகுரவர் நால்வரும் வீற்றிருக்கக் கூடிய வகையில் ஆலயத்தின் உட்புறம் அமைக்கப்பட்டள்ளது. நவக்கிரக மண்டபமும், நாகர் ஆலயமும் புனருத்தாபனம் செய்யப்பட்டுள்ளன.

புதிய கதிரேசன் மண்டபம் ஒன்றினை அமைத்த நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகம் 1000 பேர் ஒரே சமயத்தில் உட்கார்ந்து போசனம் உண்ணக்கூடிய சகல வசதிகளையும் கொண்ட கல்யாண மண்டபத்தையும் தற்பொழுது அமைத்திருக்கிறோம்.

இப்படி எத்தனையோ வழிகளில் இலங்கை மக்களுக்கும் சேவையாற்றிவரும் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகம் தொடர்ந்தும் நற்பணிகளையாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

**கொழும்பு ஸ்ரீ புதிய கதிர் வேலாயுத சுவாமி**
**கோவில் தர்மகர்த்தா சபை.**

# கொழும்பு பம்பலப்பிட்டி
# ஸ்ரீ புதிய விநாயகர், கதிர் வேலாயுத சுவாமி கோவில்
# தர்மகர்த்தா சபைத் தலைவர்
# திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியாருடன்
# ஒரு சந்திப்பு



கொழும்பு பம்பலப்பிட்டியில் வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் உவந்தளிக்கும் ஸ்ரீ விநாயகப் பெருமான் ஸ்ரீ கதிர் வேலாயுதப் பெருமான் திருக்கோவில் கும்பாபிஷேகம் கடந்த 1992-02-09 ஆம் திகதி வெகு சிறப்பாக நடந்தேறியது. நாட்டின் நாலா புறங்களிலிருந்தும் அடியார் வெள்ளம் அலை புரண்டோட, அந்தணர் குழாம் சிவாகம முறைப்படி கிரிகைகளை மேற்கொள்ள அரோகரா கோஷம் வானைப் பிளக்க நடந்தேறிய இந்தக் கும்பாபிஷேகம் இத் திருத்தல வரலாற்றில் சிறப்பு மிக்க ஓர் அம்சமாகும்.

சிறிய ஆலயமாக அமைந்திருந்த இந்த ஆலயம் இன்று சகலரையும் ஈர்க்கக்கூடிய விதத்தில் அழகிய கட்டட அமைப்புக்களையும், அருள் மழை பொழியும் அற்புத விக்கிரகங்களையும், கலைத்திறன் மிகு சிற்ப வடிவங்களைக் கொண்ட வானளாவிய கோபுரங்களையும் கொண்டு உன்னத ஆலயமாக விளங்குவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த உத்தமன் திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியாரையும் அவருக்கு உற்ற துணையாக இருந்து செயல்படும் தர்மகர்த்தா சபையினரையும், நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினரையுமே சாரும்.

ஆலய வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்த திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியாரைச் சந்தித்து அவருடன் உரையாடியதை யாவரும் அறியும் வண்ணம் உற்றதொரு பணியைச் செய்வதில் பெருமையடைகிறேன்.

'கடுகு சிறிது காரம் பெரிது' என்று சொல்லுவார்கள். அளவான உருவை அவர் கொண்டிருந்தாலும் அளப்பரிய சேவையை ஆற்றும் வல்லமை அவருக்கு உண்டு என்பதனை அவரைப் பார்த்தவுடனேயே புரிந்துவிடும். எளிய தோற்றமும், நிதானமான பேச்சும், ஆழ்ந்த சிந்தனையும், புன்னகை தவழும் வதனத்தையும் கொண்டு அறிவாற்றல் மிக்கவராகத் திகழும் அவருடன் ஒரு சில நிமிடம் பேசினால் போதும் உலக வரலாற்றையே காலடியில் கொண்டு வந்து வைத்துவிடுவார். இத்தகைய அறிவாளியுடனும், ஆன்மீகத் தொண்டனுமான அவருடன் உரையாடலைத் தொடங்குகின்றேன்.

*வினா :* *ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்று சில நாட்களின் பின் உங்களைச் சந்திக்கிறேன். உங்களுடைய அயராத உழைப்பே இந்த ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது என்று பலரும் கூறக் கேட்டிருக்கின்றேன். இந்த நல்லதொரு கருமத்தை செய்வதற்காகவே இறைவன் தாய்நாட்டிலிருந்து இந்த நாட்டுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் என்பது எனது அபிப்பிராயம் மட்டுமல்ல பலரினதும் அபிப்பிராயமும் அதுவே. எனவே எங்களுடைய நாட்டிற்கு அதாவது இலங்கைக்கு நீங்கள் எப்பொழுது எக்காரணத்திற்காக வந்தீர்களென்று கூறமுடியுமா?*

**விடை :** "செட்டி நாட் வங்கி" / "செட்டி நாட் காப்பரேசன்" ஆகியவற்றின் தலைமை அலுவலகம் சென்னையில் இருந்தது. பிரசித்தி பெற்ற இத்தாபனங்களின் கிளை அலுவலகங்கள் பல நாடுகளிலிருந்தன. இலங்கையிலும் இவை அமைக்கப்பட்டன. இவற்றை நிர்வகிப்பதற்காக தலைமை அலுவலகத்தினால் 1943 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டேன்.

*வினா :* *இங்கு கடமையேற்க வந்த உங்களது மனதில் உதித்த முதல் எண்ணம் எதுவாக இருந்தது?*

*விடை :* கடமையே கண் என்று சொல்லுவார்கள். அதனை முழுமையாகக் கடைப்பிடிக்கும் நான் "மனிதனை நல்வழிப்படுத்திப் பூரண மனிதனாக்குவதற்கு இறைவழிபாடு அவசியம், பணத்தினால் மட்டுமே ஒருவன் பண்பாளனாகிவிட முடியாது. அவனை உரிய பாதையில் கொண்டு செல்வதற்கு இறைவழி காட்டல் அவசியம் என்ற கோட்பாட்டில் முழு நம்பிக்கையும் கொண்டவனாதலினால் என் பணியை ஆலய வளர்ச்சியிலும் ஆரம்பிக்க முடிவு செய்கிதேன்."

*வினா :* *உங்கள் நற்பணியை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்?*

*விடை :* செட்டியார் தெருவிலுள்ள ஸ்ரீ புதிய கதிரேசன் ஆலயத்தைப் புனருத்தாபனம் செய்ய முதலில் முடிவு செய்தேன்.

சந்திப்பவர்
**க. கனகலிங்கம்**
(துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு)

*வினா :* *உங்களுக்கு பக்கபலமாக யாராவது இருந்தார்களா?*

*விடை :* நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினர் இங்கு வர்த்தக நோக்கத்தோடு வந்திருந்த போதிலும், அவர்களும் இறைவழிபாட்டில் முழு நம்பிக்கை கொண்டிருந்தமையால் அவர்களின் பங்களிப்பும் எனக்குக் கிடைத்தது.

*வினா :* *பம்பலப்பிட்டியில் புதிய ஸ்ரீ விநாயகர் கதிர் வேலாயுதப் பெருமான் ஆலயமும் உங்கள் சமூகத்தினரின் பணியினால்தான் வளர்ச்சியுற்றதாக அறிந்தேன். அதுபற்றிச் சொல்ல முடியுமா?*

*விடை :* அந்த நாளையில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினர் ஆடி மாதத்தில் கதிர்காம உற்சவம் தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செய்து திரும்புவது வழக்கம். இது நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்தது.

*வினா :* *உங்கள் சமூகத்தினர் மட்டும்தான் இந்த யாத்திரையில் பங்கு பற்றுவார்களா?*

**விடை :** இல்லை. சகல சமூகத்தினரும் இந்த யாத்திரையில் பங்கு கொள்வார்கள்.

*வினா :* *உங்கள் யாத்திரையில் தடைகள், ஆபத்துக்கள் ஏற்பட்டதுண்டா?*

**விடை :** இன்று இருப்பதுபோல் வாகன வசதிகளோ மற்றும் வசதிகளோ அன்று இல்லை. கானகங்களுக்கூடாகவும் நாம் செல்ல வேண்டியேற்பட்டது. அப்போது பல தடைகளும், ஆபத்துக்களும் ஏற்பட்டன. ஆனால் கதிர்காமக் கந்தன் மீது நாம் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கை அத்தனையையும் தாண்டி எமது யாத்திரையைத் தொடர வைத்துவிடும்.

*வினா :* *தொடர்ந்தும் இத்தகைய யாத்திரைகளை மேற்கொண்டு வருகிறீர்களா?*

**விடை :** அந்த யாத்திரையில் பல தடைகள் ஏற்பட்டதினால் (அதுவும் கதிர்காமக் கந்தனின் திருவிளையாடல் என்று சொன்னாலும் மிகையாகாது) அப்படித் தடை ஏற்பட்டதினால்தான் பம்பலப்பிட்டியில் நாம் வேல் ஒன்றினை ஸ்தாபிக்கக் கூடியதாக இருந்தது என்று கூறிச் சற்று மௌனமாக இருந்தார். பழைய நினைவுகளை அசைபோடுகிறீர்களா? என்று அவர் மௌனத்தைக் கலைத்தேன். சிரித்தபடியே அவர் கூறினார் அப்பொழுது ஆலயம் இருந்த நிலையையும் தற்போது இருக்கும் நிலையையும் எண்ணிப் பார்த்தேன் என்றார்.

மீண்டும் எனது கேள்விகளைத் தொடருகின்றேன்

*வினா :* *பாதயாத்திரை தடைப்பட்ட பின் என்ன செய்தீர்கள்?*

**விடை :** எப்படியும் பம்பலப்பிட்டியில் வேல் ஒன்றை பிரதிஷ்டை செய்து உபய கதிர்காமமாக உருவாக்க வேண்டுமென்று எமது சமூகத்தினர் எண்ணினார்கள். அதன் பிரகாரம் வேல் வைத்து ஆடிவேல் விழாக் கொண்டாடிவருகிறோம். இந்த விநாயகப் பெருமானைக் கொண்ட சிறிய ஆலயமே பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுதப் பெருமான் ஆலயமாக விளங்குகிறது.

*வினா :* *இந்த ஆலயத்தை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?*

**விடை :** பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இயங்கி வந்த தர்மகர்த்தா சபையில் அங்கத்தவராக இருந்த நான் 1958 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தர்மகர்த்தா சபைத் தலைவராகக் கடமையாற்றி வருவதுடன் ஆலய அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறேன்.

*வினா :* *நீங்கள் பதவியேற்ற காலத்தில் ஆலயத்தில் போதிய விக்கிரகங்கள் வழிபாட்டுக்கு இருந்தனவா?*

**விடை :** விநாயகர், இடும்பன், நாகர் ஆகிய மூன்று விக்கிரகங்கள் மட்டுமே இருந்தன.

*வினா :* *ஆலய வளர்ச்சிக்கேற்ப மக்கள் வழிபாட்டுக்கென மேலும் விக்கிரகங்களைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லையா?*

**விடை :** நவக்கிரகங்கள், மற்றும் தெய்வங்களையும் அமைக்கத் திட்டமிட்டோம். இதற்கேற்ப நவக்கிரகங்களை மகாபலிபுரத்திலிருந்தும், அம்பாள், ஆவுடையார் ஆகிய விக்கிரகங்களை மிதுலைப்பட்டியிலிருந்தும் கொண்டுவர ஒழுங்கு செய்தோம். ஆனால் நயினாதீவு பிரம்ம ஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் நவக்கிரகங்கள் வைப்பதாக இருந்தால் லிங்கமும் அம்பாளும் வைக்க வேண்டுமென்றார்.

*வினா :* *நவக்கிரகங்களை திட்டமிட்டபடி கொண்டுவந்தீர்களா?*

**விடை :** கொண்டுவந்து சேர்த்தோம். ஆனால் பிரம்ம ஸ்ரீ கைலாசநாதக் குருக்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நாம் லிங்கத்தைப் பெறும்வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

*வினா :* *எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டியதாயிற்று?*

**விடை :** கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு மேல் காத்திருக்க வேண்டியதாயிற்று.

*வினா :* *அதுவரையும் நவக்கிரகங்களை என்ன செய்தீர்கள்?*

**விடை :** இவற்றை பிரதிஷ்டை செய்யும்வரை பாதுகாப்பதற்கு வேண்டிய பல வழிமுறைகள் உண்டு. அவற்றை நீரிலும், நெல்லிலும் புதைத்து வைப்பதும் அடங்கும், அப்படியே பாதுகாத்தோம்.

வினா : *லிங்கத்தைக் கொண்டுவருவதற்கு என்ன ஒழுங்கு செய்தீர்கள்?*

**விடை :** காசி (வாரணாசி) யிலிருந்து அன்பர்கள் மூலம் இதனைப் பெறுவதற்கு கடிதங்கள் எழுதியும், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் அவை பயன்தரவில்லை. என் மூத்த மகள் திருமதி அலமேலு அண்ணாமலை காசி யாத்திரை மேற்கொண்ட பொழுது இரண்டாவது மகள் திருமதி மீனாட்சி வினைதீர்த்தான் டில்லியில் வசித்து வந்தமையால் அவர் சுயம்பு லிங்கத்தை தனது மூத்த சகோதரியான திருமதி அலமேலுவிடம் அன்பளித்ததை, இந்தியாவில் அப்பொழுது நின்ற நான் அவரிடமிருந்து அதனைப் பெற்று கொழும்பிற்குக் கொண்டு வந்து பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் 1981-07-08 இல் பிரதிஷ்ட்டை செய்ய இறைவன் அருள்பாலித்திருந்தார். அதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

வினா : *நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் இலங்கையில் மட்டும் தான் தமது இறைபணியை அதாவது ஆலயங்கள் அமைக்கும் தொண்டில் ஈடுபட்டார்களா? அல்லது பிறநாடுகளிலும் இத்தகைய தொண்டுகளை மேற்கொண்டார்களா?*

**விடை :** நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் உலக நாடுகளிலெல்லாம் குறிப்பாக பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, சம்பியா, கானா, தென் ஆபிரிக்கா, மொறிசியஸ் போன்ற நாடுகளில் வசித்து வந்தார்கள். அவர்கள் அங்கெல்லாம் ஆலயங்களை அமைத்து மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு அயராது உழைத்து வந்தார்கள்.

வினா : *பம்பலப்பிட்டி புதிய ஸ்ரீ விநாயகர் கதிர் வேலாயுத சுவாமி ஆலய கட்டட வேலைகளையும், மற்றும் சிற்ப வேலைகளையும் மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டவர்கள் தத்தம் பொறுப்புக்களையும், கடமைகளையும் நன்குணர்ந்து செயலாற்றியிருப்பதை உங்களால் உணரக்கூடியதாக இருக்கின்றது. இந்தப் பணியில் ஈடுபட்டவர்கள் அனைவரும் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கூறமுடியுமா?*

**விடை :** இந்தியாவிலிருந்து இத்தகைய பணியாளர்கள் வரவழைத்து ஆலய கட்டடங்களை அமைக்க முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம். ஆனால் பல்வேறு தடங்கல்கள் ஏற்பட்டமையால் இலங்கையிலுள்ள சிற்பிகளையும், ஸ்தபதிகளையும் கொண்டு இத்திருப்பணியை இனிது நிறைவேற்றினோம்.

வினா : *நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினர் கொழும்பில் மட்டும்தான் ஆலயங்களை அமைப்பதிலும் அவற்றைப் பரிபாலிப்பதிலும் அக்கறை செலுத்தினீர்களா? அல்லது வேறு இடங்களிலும் இத்தகைய பணியை மேற்கொண்டீர்களா?*

**விடை :** கொழும்பு வர்த்தக கேந்திர நிலையமாக இருக்கின்றது என்பதற்காக கொழும்பில் நாம் விசேட கவனம் செலுத்தவில்லை. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எமது சமூகத்தினர் இத்தொண்டைச் செய்து வருகிறார்கள். மலை நாட்டில்கூட பல ஆலயங்களை நாம் அமைத்துள்ளோம்.

வினா : *அவற்றை நீங்கள் நேரடியாகப் பரிபாலித்து வருகின்றீர்களா?*

**விடை :** இல்லை. அவற்றின் நிருவாகத்தை அந்த அந்தக் கோவில் தர்மகர்த்தா சபைகளும் அவற்றைப் பேணிப் பாதுகாத்து வருபவர்களும் பரிபாலித்து வருகின்றார்கள்.

வினா : *அத்தகைய ஆலயங்களின் தற்போதைய நிலை எப்படி இருக்கின்றது?*

**விடை :** அவையும் மிகவும் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. அதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

*வினா :* *மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயமும் ஒரு காலத்தில் உங்கள் சமூகத்தினரின் நிருவாகத்தின் கீழிருந்ததாக அறிகின்றேன். அதைப் பற்றிச் சிறிது சொல்ல முடியுமா?*

**விடை :** பல ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்கனவே இருந்த 40 ஏக்கர் கோவில் காணியையும், 80 ஏக்கர் வயல் காணியையும் யாழ்ப்பாணக் கச்சேரியில் சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் ஏலத்தில் விடப்பட்டபோது எமது நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினர் அவற்றை வாங்கினர்.

*வினா :* *இன்று வரையும் உங்கள் சமூகத்தினரின் கையில்தான் நிருவாகம் இருக்கின்றதா?*

**விடை :** 1949ம் ஆண்டுவரை எங்கள் சமூகத்தினரின் நிருவாகத்தின் கீழ்த்தான் இருந்தது. எமது சமூகத்தினரின் செட்டியார் தெரு ஸ்ரீ புதிய கதிர் வேலாயுதர் சுவாமி கோவில் சார்பாக கணக்குப் பிள்ளையொருவரை அங்கு நியமித்து அவர் மூலம் நிர்வாகத்தைக் கவனித்து வந்தோம்.

*வினா :* *அதன் பின்னர்?*

**விடை :** 1949 ஆம் ஆண்டு அன்பர்கள், அடியார்கள் ஆகியோரின் வேண்டுகோளுக் கிணங்க ஆலய நிருவாகத்தை இறைவனடி சேர்ந்த சேர் கந்தையா வைத்தியநாதனைத் தலைமைத்துவமாகக் கொண்ட சபையினிடம் முதல் காளாஞ்சி நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினருக்கு வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன், வாய்ப்பேச்சில் ஒப்படைத்தோம். அவர்கள் திறம்பட நிருவகித்து வருவதைக் கண்டு அகமகிழ்கின்றோம். மேலும் எங்கள் சமூகத்தினரின் "செட்டியார் மடம்" என்ற பெயரில் இன்றும் ஒரு மடம் இருந்து வருகின்றது.

*வினா :* *மிகவும் அழகான நவீன வசதிகளுடன் கூடிய கொழும்பு - பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவிலை எத்தனையோ கட்டடக் கலை நிபுணர்கள் இருக்கின்ற போதிலும் கட்டடக் கலை நிபுணர் திரு. துரைராஜா அவர்களிடம்தான் ஆலைய புனருத்தாபன வேலையை ஒப்படைக்க வேணடுமென்ற முடிவுக்கு நீங்கள் வருவதற்கான அடிப்படைக் காரணங்களை மனம் திறந்து சொல்ல முடியுமா?*

**விடை :** மிகவும் சிக்கலான கேள்வியைக் கேட்கிறீர்கள். உங்களைப்போல் மற்றவர்களும் கேட்கலாம். ஆனபடியால் இதற்கு சுருக்கமாக விடை கூறுகின்றேன். அவரின் திறமை எமது நாட்டில் மட்டும் நிலை நாட்டப்பட்டதல்ல. உலகநாடுகளிலெல்லாம் அவருக்குப் பேரும் புகழும் இருப்பதை நான் நன்கு அறிவேன். எமது நாட்டில் இந்து திராவிட கட்டட நிபுணத்துவம் பெற்றவர் திரு. வி. எஸ். துரைராசா. அதுமட்டுமல்ல அவர் கட்டடக் கலையில் ஒரு நிபுணராக இருந்த போதிலும், இறை அன்பிலும், தொண்டிலும் அவர் காட்டி வந்த ஆர்வத்தையும் நான் நன்கு அறிந்து வைத்திருந்தேன். புதிய ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தையும் அவர் மிகவும் அழகாக அமைத்தார். இன்று இம்மண்டபம் ஒரு கலைக் கோவிலாக விளங்குகின்றது. அவர் இத்தகைய கட்டடங்களில் தனது திறமையைக் காட்டியமையே இந்த ஆலய புனருத்தாபன வேலையை அவரிடத்தில் ஒப்படைக்கத் தூண்டியது.

*வினா :* *அவரிடத்தில் நீங்கள் அனுபவவாயிலாகக் கண்ட குணாதிசயங்களையும், தொழில் நுட்ப திறனைப் பற்றியும் கூறமுடியுமா?*

**விடை :** திரு. துரைராசா எடுத்த கருமத்தை திறம்பட செய்துவிட வேண்டுமென்ற ஆர்வமும், பொறுப்புணர்ச்சியும் கொண்டவர். அத்துடன் தானாகவே எந்த ஒரு வேலையிலும் திருப்திப்பட்டாலொளிய அவர் ஆறுதல் அடையமாட்டார். அவர் மூளை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருக்கும் என்பதை அவர் நடவடிக்கைகளிலிருந்து நான் உணர்ந்து கொண்டேன்.

அவரிடத்தில் காணப்பட்ட தன்னலமற்ற தூய சேவையை நீங்கள் நன்றாக எடைபோட்டிருக்கின்றீர்கள் என என்னால் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய சிறந்த ஆலயத்தை உருவாக்கிய கட்டடக் கலைஞர் திரு. துரைராசாவின் பணிகள் மேலும் தொடர எல்லாம் வல்ல இறைவனை நாமும் பிரார்த்திக்கிறோம்.

வினா : *மேலும் இத்திருப்பணியில் பங்களிப்புச் செய்தோர் பற்றிக் கூறமுடியுமா?*

**விடை :** திரு. எம். சத்திவடிவேலு தலைமையில் சிலை அமைப்புக்களும், ஸ்தபதி திரு. எஸ். எஸ். மகேஸ்வரன் தலைமையில் சுதை வேலைகளும், 'சமக்கோன்' நிறுவனத்தினரினால் கட்டட அமைப்புக்களும், பளிங்குக் கற்கள் பதிக்கும் வேலைகளை "றோவிம் கன்கிறீட் வேர்க்ஸ்" நிறுவனத்தினரும் மேற்கொண்டனர். அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

வினா : *ஆலயத்திற்கு தினம் தினம் பக்தர்கள் கூட்டம் பெருகி வருகின்றதே அவர்களுக்கு நீங்கள் கூறுவது என்ன?*

விடை : எல்லாம் வல்ல இறைவன் அவர்களைத் தம்பால் ஈர்க்கின்றார். அவரின் அருளைப் பெற வருபவர்களுக்கு தர்மகர்த்தா சபைத் தலைவர் என்ற முறையில் நான் கூறுவது என்னவென்றால் இந்த ஆலயம் எல்லோருக்கும் பொதுவானது என்ற உணர்வுடன் ஒவ்வொருவரும் இந்த ஆலயத்தின் மெருகு குன்றாதவாறும் புனிதம் பாதிக்கப்படாதவாறும் பேணிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பக்தனின் கடமையாகும். இதன்படி அன்பர்கள் ஒழுகுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

வினா : *இந்த புதிய நவீன ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்கும் உத்தேசம் இருக்கின்றதா?*

**விடை :** இராஜ கோபுரம் அமைக்க வேண்டுமென்பதே எனது அவாவும்கூட. காலி வீதி முகப்பில் போதிய இடவசதி இன்மையால் உடனடியாக அதைச் செய்ய முடியாமல் இருக்கின்றது. கூடிய விரைவில் எல்லாம்வல்ல இறையருளால் போதிய இடவசதி கிடைக்கப்பெற்று இப்பணியும் பூர்த்தியாகுமென நம்புகிறேன்.

இவ்வளவு நேரமும் அமைதியாகவும், பொறுமையாகவும் விளக்கமாகவும் வினாக்களுக்கு விடையளித்த உங்களுக்கு எனது சார்பிலும் பம்பலப்பிட்டி புதிய ஸ்ரீ விநாயக கதிர் வேலாயுத சுவாமி கோவில் அன்பர்கள் அடியார்கள் சார்பிலும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. பழனியப்ப செட்டியார்
திருமதி. மங்களம் ஆச்சி

# கொழும்பு நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினரின் நற்பணி மேலும் மேலும் வளர வேண்டும்.

## திரு. சேதுராமன் செட்டியார் நாராயணன்

### (ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினர்)



நகரத்தார் என்று சொன்னால நகரும் சிறு குழந்தை கூட
சிகரத்தார் எனப் போற்றும் சீரான குலத்தார்கள்
நகரத்தில் பவனி வந்து நாள் தோறும் பேர் கொண்டு
சிறப்புக்குள் வலம் போகும் மகத்தான குலத்தவர்கள்
சின்னதொரு தவறேனும் சிந்தையில் கொள்ளாத
அன்பு மிகும் நீதி வழி அவதரித்த குலத்தார்கள்

அந்தக் குலம் உதித்த பெரியார்கள் அதாவது நாட்டுக் கோட்டை சமூகத்தைச் சேர்ந்த நகரத்தார்கள் வணிகத்திற்காக தாய்நாடாம் தென்னாட்டில் இருந்து கடல் கடந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்த பல நாடுகளில் ஒன்றாகிய ஈழத்திருநாடாம் இலங்கைக்கு 1796 ஆம் ஆண்டளவில் வந்து தொழில்கள் பல ஆக்கி குடிகள் பலகாத்து பொருள் ஈட்டுவது ஒன்றைமட்டும் குறிக்கோளாகக் கொள்ளாது அவர்களுக்கென்று சில நியதிகளை வகுத்துக் கொண்டு அந்தப்பாதையில் முன்னேறுவதே அவர்களது லட்சியமாகக் கொண்டு வாழ்ந்து கீதையிலே சொல்லியபடி

"கர்மத்தை செய் பலனை அவனிடம் (இறைவனிடம்) ஒப்படைத்துவிடு" என்பதற்கிணங்க நன்மை செய்வது என்று தீர்மானித்து அதை நன்றி மறந்தவருக்குக் கூடச் செய்கின்ற பக்குவத்தைப் பெற்று வாழ்ந்த அந்த நகரப் பெருமக்கள் (செட்டியார்கள்) அவர்கள் ஈட்டிய லாபத்தில் ஒரு பகுதியை தர்மத்திற்கு அதாவது அறப்பணிக்கு செலவு செய்வது என்ற குறிக்கோளுடன் தொழில் செய்த இடங்களில் எல்லாம் கூட்டம் கூடி மகிமை என்கின்ற பெயரால் அவர்களால் இயன்ற பொருளைக் கொடுத்து அந்தப் பொருள்கொண்டு இலங்கையில் மிகவும் பழமை வாய்ந்த கோவில்களில் ஒன்றாகிய கொழும்பு மாநகர் செட்டியார் தெருவில் அமைக்கப் பெற்ற திருக் கோவிலில் எழுந்தருளியிருக்கும்

ஓம் சண்டப் பிரசண்ட கோதண்டபாணிக்கு மருகன்
தத்தமித் தாளமொடு ஒத்த நின்றாடிய சதாசிவன் பெற்ற முருகன்
தண்டலம் நிறைந்திடும் அண்டமும் முனிவரும் தான் வணங்கிடும் வேலவன்
சாலோப சாமீப, சாரூப, சாயுட்சிய சகல மோஷய
அதிகார கர்த்தன் என்றெல்லாம் வர்ணிக்கப்படும்

ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ புதிய கதிர் வேலாயுத சுவாமி கோவிலுக்கு என்று பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பம்பலப்பிட்டியில் பல ஏக்கர் இடம் வாங்கி கோவில் எழுப்பி உபய கதிர்காமம் என்று பெயர் சூட்டி இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற ஆடிவேல் விழாவைச் சிறப்பாகச் செய்து வந்தனர்.

நாட்டுக் கோட்டை சமூகத்தைச் சேர்ந்த பலர் அவர்களது தொழில்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு 1948 இன் பின்னர் தாய் திருநாடாம் தென்னகத்தை நோக்கி புறப்பட்டதைத் தொடர்ந்து நகரத்தார்களின் எண்ணிக்கையும் வெகுவாக அருகிவரும் காலகட்டத்தில் இன்று திரு. ராம பழனியப்ப செட்டியார் ஐயா அவர்கள் தனி மனிதராக இருந்து அரும்பாடுபட்டு பல இடையூறுகளுக்கு மத்தியிலும் உடல் நிலையையும் பொருட்படுத்தாது சுக துக்கங்களை எல்லாம் மறந்து கடந்த 48 ஆண்டுகாலமாக இந்தக் கோவில் சபையின் அங்கத்தவராகவும், பின்னர் தலைவராகவும் இருந்து எங்கள் இளைய நல்லதொரு தலைமுறையினருக்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைந்து அளப்பரிய சேவைகளை ஆற்றிவருவது கண்டு நாம் அளவில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

பணத்தைப் பெரிதென மதிப்பவர்கள் மத்தியில் தன்னலங் கருதாது தரணி போற்றும் உத்தம சேவகனாக 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற உற்ற நோக்குடன் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கோவிலைப் புதுப்பித்து மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்ற மன உறுதியோடு பாலஸ்தாபனம் செய்து நகரத்தார் நாட்டுக் கோட்டை செட்டியார்களின் நிதிகொண்டு எளில் மிகு துவிதள சுந்தர விமானம், ராஜகோபுரம், பிரகார மண்டபம் ஸ்ரீ சிவன் அம்பாள் ஆலயம், உற்சவ நாயகர்கள் அமைந்து இருக்கும் சபா மண்டபம் என்பன சிற்பசாஸ்திரங்களுக்கமைய பெரும் பொருட் செலவில் கட்டி முடித்து கும்பாபிஷேகத்தையும்,கடந்த தை மீ 26ம் திகதி (09-02-92) ஞாயிற்றுக்கிழமை நடாத்தி முடித்தார்.

அவர்களின் இந்த அறப்பணி பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டுகள் தொடரவும் ஆன்மீகம் ஓங்கவும் அவர்களுக்கு மன உறுதியையும், உடல் பலத்தையும், நீண்ட ஆயுளையும் கொடுக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவன் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமியின் பாதார விந்தங்களை இலங்கைவாழ் தமிழ் மக்களின் சார்பாகவும், குறிப்பாக நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் சார்பாகவும் போற்றிப் பணிகின்றோம்.

I believe in three worlds of existence: the First World, where souls take on physical bodies; the Second World where souls take on astral or mental bodies; & the Third World, where soul bodies, Mahadevas, exist in their own selfeffulgent form.

I believe in the Mahadeva Lord Ganesha, Son of Siva/Sakti, to whom I must first supplicate before beginning any worship or task.

I believe in the Mahadeva Lord Muruga, Son of Siva /Sakti, whose Vel of Grace dissolves the bondages of ignorance.

I believe that religion is the harmonious working together of the Three Worlds, and that this harmony can be created through temple worship, wherein the Three Worlds become open to one another, and the beings within them able to communicate.


I believe in the Law of Karma - that one must personally reap the effects of all actions he has caused - and that each soul will continue to reincarnate until all karmas are resolved and Moksha, Liberation, is attained.

*Courtesy* - Subramuniya Swamy

# கும்பாபிஷேகக் காட்சிகள்



1988 இல் பாலஸ்தாபனக் கிரியைகளையும்,
9-2-92 இல் மகா கும்பாபிஷேகத்தையும் திறம்பட
நடாத்திய பிரதிஸ்டா சிரோமணி நவாலியூர்
பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்



முதல் நாள் கர்மாரம்பத்தின் பொழுது




முதல் நாள் கணபதி ஹோமம்
நடைபெற்றுக் கொண்டிருக்கையில்



இரண்டாவது நாள்
ஆச்சார்ய ரட்சாபந்தனம்

இரண்டாவது
நாள்
எஜமான்
ரட்சாபந்தனம்






இரண்டாவது நாள் கடஸ்தாபனத்தின்போது



இரண்டாவது நாள் ஆச்சார்ய வர்ணத்தின்பொழுது



இரண்டாவது நாள் உற்சவ விநாயகர்
கும்ப ஸ்தாபனத்தின் பொழுது




இரண்டாவது நாள் பிரதான யாகத்தில்
அக்கினி உற்சவத்தின் பொழுது



இரண்டாவது நாள் பிரதான யாக
அக்கினி உற்சவத்தின் பொழுது



உற்சவ மூர்த்திகள் தானிய வாசம்



ஸ்ரீ விநாயகரை ஆதிமூல பீடத்தில் ஏற்றும் காட்சி



திருமதி வேலம்மாள் செல்லச்சாமி அஸ்டபந்தனம்
தயாரிக்கும் காட்சி



பக்தர்களில் ஒருவர் அஸ்டபந்தனம் இடிக்கும் காட்சி





எண்ணெய்க் காப்புசாந்த திரண்டிருந்த அடியார்கள்



திருமதி மங்களம் ஆச்சி பழனியப்ப செட்டியார்
எண்ணைக்காப்பு சாத்தும் காட்சி




மூன்றாவது நாள் அஸ்டபந்தன பிரதட்சினம்



நான்காவது நாள் விம்ப சுத்தியின் பொழுது




நான்காவது நாள் மூலவர்
ரட்சாபந்தனத்தின் பொழுது



நான்காவது நாள் ரட்சாபந்தனத்தின் பொழுது




கட்டிடக் கலைஞர், கட்டிட ஒப்பந்தகாரர், ஸ்தபதி, சிற்பி
ஆகியோர் கௌரவிக்கப்படுகிறார்கள்





நான்காவது நாள் சிவாச்சாரியார்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்






யாகசாலையில் விநாயகருக்கு தீபாராதனை நிகழும் காட்சி




கர்ப்பக்கிரக விமானம் கும்பாபிஷேகம் செய்யப்படும் நிகழ்ச்சிகள்





எஜமான் அபிஷேகம்





கோயில் தர்மகர்த்தாவிற்கு கௌரவக் காளாஞ்சி
கொடுக்கும் காட்சி



எஜமான் ஆசீர்வதிக்கப்படுகிறார்



காலி நாட்டுக் கோட்டை நகரத்தார்
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்




நீர் கொழும்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் நகரத்தார்



ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்
கொழும்பு 13




வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளி அம்மன் கோவில்




பம்பலப்பிட்டி ஸ்ரீ சம்மாங்கோட்டார் மாணிக்க
விநாயகர் கோவில்




முகத்துவாரம் பிள்ளையார் கோவில்



திரு. பழனியப்ப செட்டியார் தம்பதிகளும், கும்பாபிஷேகத்திற்காக இந்தியாவிலிருந்து வருகைதந்த திரு. சுப்பையா செட்டியாரும்



கும்பாபிஷேக நிகழ்ச்சியின் போது தர்மகர்த்தா அவர்களும் திரு. கிருஷ்ண மூர்த்தியும், திரு. சி. த. சுப்பிரமணியன் செட்டியாரும்



வசந்த மண்டபத்தில் தீபாராதனை



சுவாமி உள்வீதி எழுந்தருளும் காட்சி



கும்பாபிஷேக தினத்தில் திரண்டிருந்த
அடியார் கூட்டத்தின் ஒரு பகுதி



நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர்



நாட்டுக்கோட்டை நகரத்தார் சார்பில்
பட்டுச்சாத்த வலம் வருதல்



கும்பாபிஷேக குருமார் சிலருடன்



திரு பழனியப்ப செட்டியார் அவர்கள் துணைவி, புதல்வியுடன்




திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் குடும்பத்தினரும்,
மற்றும் அன்பர்களும்



மண்டலாபிஷேகத்தின்போது மாண்புமிகு அமைச்சர்
சௌ. தொண்டமான் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக்
கௌரவிக்கப்படல்






ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தா
திரு. V. T. V. தேவநாயகம்பிள்ளை தம்பதிகளுடன் தர்மகர்த்தா



இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பிரதம முகாமையாளர்
திரு. ஆர். எம். சண்முகம் தர்மகர்த்தாவுடன்



நவீன அமைப்புக்களுடன் கூடிய ஆலயம்

# சிந்தனைச் சிற்பி கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜாவின் இதயம் பேசுகிறது.



## அறிமுகம்

கால நீரோட்டத்திற்கேற்ப காலத்திற்குக் காலம் கட்டடத் துறையில் புதுமைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற தணியாத தாகம் கொண்டவர் கட்டக் கலை நிபுணர் திரு. வி. எஸ் துரைராசா அவர்கள்.

இவர் பிரித்தானிய கட்டடக் கலைஞர் சம்மேளனம், ஆஸ்திரேலிய கட்டடக் கலைஞர் சம்மேளனம், இந்திய கட்டடக் கலைஞர் சம்மேளனம், ஸ்ரீ லங்கா கட்டடக் கலைஞர் சம்மேளனம் ஆகியவற்றின் மூத்த அங்கத்தவராவார்.

இவர் நவீன கட்டிடங்கள் பலவற்றை இலங்கையிலும் பிற நாடுகளிலும் திறம்பட அமைத்திருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன் இந்து திராவிடக் கட்டிடக் கலையிலும் இவர் பாண்டித்தியம் பெற்றவர்.

யாழ்ப்பாணம் சிவன் கோவில் ராஜகோபுரம், கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் ராஜகோபுரம், காலி சிவன் கோவில் ராஜ கோபுரம், செக்கடித்தெரு முருகன் கோவில், முகத்துவாரம் சிவன் கோவில் ஆகியன அவரின் நிபுணத்துவத்தையும், இறைவன்பால் கொண்ட பேரன்பையும், தன்னலமற்ற சேவையையும் பிரதிபலிக்கின்றன.

இதய சுத்தியுடன் இப்பணிகளை மேற்கொண்டுவரும் இவர் நீண்ட நாட்களாக தனது கற்பனையில் உருவாகிய நவீன ஆலயத்தை கட்டி முடிப்பதற்கு இறைவன் பேரருள் பாலித்ததையிட்டு அகமகிழும் திரு. வி. எஸ். துரைராசா அவர்கள் அப்பணியை திறம்பட முடிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தையளித்த மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை தலைவர் திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியாரையும் மனதார வாழ்த்துகின்றார்.

பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலய அமைப்புக்கள் பற்றி அவர் இதயம் பேசுகிறது :-

## ● அன்று

ஆதிமனிதர்கள் தமது சிற்றறிவுக்கேற்ப பல்வேறு வடிவங்களில் உருவங்களை உருவாக்கி அவற்றை வழிபடத் தொடங்கினார்கள். மழையினாலும் வெயிலினாலும் அவை பழுதடைந்துவிடாதபடி இலைகளாலும் குழைகளினாலும் சிறு சிறு குடிசைகளை அமைத்து தமது இஷ்ட தெய்வங்களை வைத்து வழிபடத் தொடங்கினர். கால நீரோட்டத்தில் அவர்கள் சிந்தனா சக்தி மேலும் வளர்ச்சியுற்றதன் பயனாக உறுதியான சிறு சிறு கட்டடங்களை உருவாக்க முற்பட்டனர். அவற்றிற்கு செங்கற்களையும், சுண்ணாம்பையும் பயன்படுத்தினர்.

அன்று தென்னாட்டில் பல்லவர் காலத்தில் குடைவரைக் கட்டிடங்கள் கோவில்களாயின. சோழர், பாண்டியர், விஜய நகர காலங்களில் நுட்பமான வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்ட தனிக்கற்றூண்களாலும், சட்டங்களாலும் பிரமாண்டமான கூட கோபுரங்களுடனான கட்டிடங்கள் கோவில்களாயின. இக்கட்டிடங்களில் சிற்பிகள் தமது கைவண்ணத்தை காட்டி மேலும் மெருகூட்டினர்.

அன்று 'கொங்கிறீற்று,' இரும்பு போன்ற கட்டிடப் பொருட்கள் கிடையாது. கற்பாறையிலிருந்து செதுக்கிய தட்டுக்களால் தான் கூரை வேய வேண்டியிருந்தது. ஆகவே தூண்கள் கிட்ட கிட்டவே அமைக்க வேண்டியிருந்தது. இன்று இரும்பாலும் 'கொங்கிறீற்றாலும்' தூண்களின் இடைவெளி விரிவுபடுத்தி அகண்ட மண்டபங்களை அமைக்கக் கூடியதாக இருக்கிறது.

வானளாவிய கோபுரங்களை மன்னர்கள் அன்று கட்டினார்கள்: வேண்டிய அளவிற்கு பரந்த நிலப்பரப்பு இருந்தது. அரசர்கள் பணத்தை வாரி வாரி வழங்கினார்கள். சிற்பிகள் சிந்தனைப் பறவையைத் தட்டிவிட்டு தமது கைவண்ணத்தைக் காட்டினார்கள்.

## ● இன்று

இடநெருக்கடியும் பணமுடையும் தலைதூக்கியுள்ள இன்றைய கால கட்டத்தில் கண்குளிர நவீன அமைப்புக்களுடன் கூடிய ஒரு ஆலயம் அமைப்பதென்றால் சுலபமான காரியமா? ஆனால் அத்தகைய ஓர் ஆலயம் உருவாக வேண்டுமென்பது இறைவன் சித்தமாகும். இன்று நவீன கட்டட அமைப்புக்களைக் கொண்ட ஆலயமொன்று கொழும்பு மாநகரில் உருவாகியிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டை அண்மித்து விட்டோம். உலகில் எவ்வளவோ மாற்றங்களை காண்கிறோம். மனிதன் சந்திரனில் காலடி வைத்து, செவ்வாய்க் கிரகத்திலும் காலடி வைக்க முயற்சி செய்கிறான். மனிதனின் வாழ்க்கையும் பழக்க வளக்கங்களும் வேகமாக மாறி வருகின்றன. இப்படியான சூழ்நிலையில் முன்னேற்றமடைந்துவரும் ஓர் நகரத்தில் ஆகம விதிகளையும் அனுசரித்து இன்றைய நகரவாழ் பக்தர்களின் பழக்கவழக்கங்களையும் கருத்தில்கொண்டு இந்த ஆலயம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

## ● ஆலய அமைப்பு

முன்பிருந்த கோவிலின் ஆதிமூலத்திலேயே இப்புதிய கோவிலின் ஆதிமூலத்தையும் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இங்கு எழுந்தருளிய விநாயகர் மேற்குதிசையைப் பார்த்துக் கொண்டிருந்தார். இதன் காரணமாக வழக்கத்துக்கு மாறாக கோயிலின் வாசலை மேற்குத் திசையில் அமைக்க வேண்டியிருந்தது.

இக்கோவில் ஓர் மாடக் கோவிலாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. மாடக்கோவில்களுக்கு கட்டுப்பாடான விதிகள் இல்லை. ஆகவே கர்ப்ப கிரகத்தை முன் இருந்த இடத்திலேயே மையமாக வைத்து அதைச்சுற்றி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் பஜனைகள், கதா-கலாட்சேபங்கள், சொற்பொழிவுகள், ஆகியன நடாத்துவதற்கு வசதியாகவும், திருமண வைபவங்கள் நடாத்துவதற்கு ஏற்ற இடமாகவும் இந்த ஆலய கட்டடம் அமைந்துள்ளது.

இக்கோவிலின் வாயிலில் மூன்று தளங்களுள்ள கோபுரம் அமைக்கப்பட்டிருக்கின்றது. வாயில் கதவு தேக்கு மரத்தினால் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டிருக்கின்றது.

கோவிலினுள்ளே நுழைந்ததும், வலது பக்கத்தில் இடும்பன் கோவில் இருக்கிறது. வாயில் நேரில் கர்ப்பகிரகத்தில் (ஆதிமூலத்தில்) விநாயகர் கோவிலும் அதன் வலது பக்கத்தில் முருகன் கோவிலும், அதன்முன் சிவன், அம்பாள் கோவில்களும் கட்டப்பட்டிருக்கின்றன. வசந்த மண்டபமும், அதன்முன் விசாலமான சபா மண்டபமும் அமைந்துள்ளன.


வெளியில் அரசமரத்தடியில் நாகர் கோவிலும், நவக்கிரக கோவிலும் முன்பிருந்த இடங்களிலேயே திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

அநேகமான கோவில்களின் உட்புறம் இருட்டாகவும், காற்றோட்டம் அற்றதாகவும் இருப்பதைக் காணக்கூடியதாகவிருக்கின்றன. ஆனால் இக்கோவிலுக்கு வெளிச்சம் வருவதற்கும், காற்றோட்டத்திற்கும் ஏற்ற விதத்தில் கண்ணாடி ஜன்னல்களும், ஆகாய வெளிச்ச வாயில்களும் மல்லிகை வடிவத்தில் கொங்கிறீற் கிறில்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோவிலினுள் தீப ஆராதனைகளின் போது எரிக்கப்படும் கற்பூரம், ஊதுபத்தியாகியவைகளின் புகை மேலே எழுந்து வெளியேறுவதற்கு கூரையின் அண்மையில் 'கிறில்கள்' வைக்கப்பட்டுள்ளன.

இக்கோவிலின் நிலம் சுத்தமாக இருப்பதற்காக விலையுயர்ந்த "ரெராசோ" கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. பக்தர்கள் மனம்போல் உட்கார்ந்து இறைவனைத் தியானிக்க வசதியாகவுள்ளது. இக்கோவிலின் கூரை கொங்கிறீற்றாலானது. வெப்பத்தைக் குறைக்கவும் மழை நீர் ஊறி ஒழுகாமலிருக்கவும் ஆறு அங்குல கனத்திற்கு செங்கல்துண்டுகளும், சுண்ணாம்பும், கடுக்காய்ச்சாறும், வெல்லமும் கலந்த சாந்தினால் பூசப்பட்டு அதன்மேல் சுட்ட களிமண் தட்டுகளினால் மூடப்பட்டிருக்கின்றன. இவ்வேலையை தமிழ் நாட்டிலிருந்து 'செட்டி நாட் காப்பரேசன் நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட கொத்தனார்கள் செய்தார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உறுதியுடன் நிலைத்திருக்க வேண்டும் என்ற நோக்குடன் இக்கட்டிடம் கட்டப்பட்டிருக்கின்றது.

கோவிலினுள் கட்டப்பட்டிருக்கும் தூண்கள் எட்டு போதிகளுடன் காணப்படுகின்றன. இவ்வகையான தூண்கள் இங்குதான் முதல்தடவையாக கட்டப்பட்டிருக்கின்றன. இது சிற்பி காண்டீபனின் கைவண்ணம். கோபுரத்திலும், விமானத்திலும் காணப்படும் சிலைகள் சிற்பி சக்திவடிவேலுவின் படைப்புக்கள். இவர்கள் இலங்கையைச் சேர்ந்த கலைஞர்கள். தமிழ் நாட்டிலிருந்து சிற்பிகளை வரவழைக்க திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் எவ்வளவோ முயற்சித்தும் இலங்கையில் அப்போது நிலவிய பதட்டநிலை காரணமாக இவர்கள் இந்நாட்டிற்கு வருவதற்கு தயங்கினார்கள். ஆகவே இலங்கைச் சிற்பிகள், ஸ்தபதி மகேஸ்வரனின் தலைமையில் இக்கட்டிடத்திற்கு புராதன கலைவண்ணம் கொடுத்தனர்..

# பம்பலப்பிட்டி
# ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுதர் சுவாமி கோவிலின் வரைபட அமைப்பு




1. கோபுர வாயில்
2. ஆதிமூலம் - விநாயகர்
3. முருகன்
4. வசந்த மண்டபம்
5. அம்பாள்
6. சிவன்
7. இடும்பன்
8. சந்தாகோபாலர்
9. நவக்கிரகம்
10. தேங்காய் உடைக்கும் இடம்
11. வெளி வீதி
12. மடப்பள்ளி
13. காவல்
14. பாத அணிகள்
15. பாத சுத்தி

## ● சிந்தனையில்

இக்கட்டிடத்தின் உள்சுவர்களில் புராண நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் வர்ணப் படங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

கோவில் கட்டிடத்தை சுற்றியுள்ள தோட்டத்தைப் பூங்காவாக்கவும், வெளிவீதியில் வெறுங்காலுடன் நடந்து கோவிலைச் சுற்றி வலம் வந்து வழிபட ஏதுவாக பாதைகள் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

## ● நன்றி

நான் கற்பனையில் கண்ட நவீன ஆலயத்தை திறம்பட கட்டி முடிப்பதற்கு என்னுடன் அவ்வப்போது அளவளாவி தனது கருத்துக்களையும் ஒத்தாசைகளையும் வழங்கி என்னை ஊக்குவித்த தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் அவர்க்கும், ஆகம விதிகளையும், சம்பிரதாயங்களையும், நிலையங்களையும் சுட்டிக்காட்டி உதவிய ஸ்ரீமத் விஸ்வநாதக் குருக்கள் அவர்களுட்பட, கோபுர சிற்ப சித்திர வேலைகளின் ஒப்பந்தக்காரரான ஸ்தபதி திரு. எஸ். எஸ். மகேஸ்வரனுக்கும், மண்டப கட்டடத்தின் ஒப்பந்தக்காரரான 'சமக்கோன்' நிறுவனத்தின் தலைவரான திரு. எஸ்.மகேஸ்வரனுக்கும் மற்றும் கட்டட அமைப்பில் பூரண ஒத்துழைப்பு வழங்கிய துரைராசா அசோசியேட்டஸ் நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் குறிப்பாகத் திரு. வி. நவரத்தினத்திற்கும், வதிவிட பொறியியலாளர் திரு. கே. பிருந்தகுமார் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


சகலரையும் ஒன்று சேர்த்து இத்திருப் பணியை திறம்பட நிறைவாக்கியது விநாயகப் பெருமானின் பூரண கடாச்சமேயாகும்.

I believe Lord Siva is God, whose absolute Being, Parasivam. transcends time, form and space.


I believe Lord Siva is God. whose immanent nature of love is the substratum or Primal Substance and Pure Consciousness flowing through all form.

I believe Lord Siva is God, whose immanent nature is the Primal Soul, Supreme Mahadeva, Siva/Sakti, the Creator, Preserver and Destroyer of all that exists.


*Courtesy* - Subramuniya Swamy



பக்தர்கள் மனம்போல் உட்கார்ந்து
இறைவனைத் தியானிக்க வசதியாகவுள்ளது.




வெளிச்சம் வருவதற்கும்
காற்றோட்டத்திற்கும் கண்ணாடி
ஜன்னல்கள்




புகை மேலே எழுந்து வெளியேறுவதற்கு
கூரையின் அண்மையில் கிறில்கள்




எட்டுப் போதிகளுடனான தூண்கள்




ஆதிமூலத்தில் விநாயகர்



சிவன் அம்பாளின் அழகிய விமானம்



மூலவர்




பாலாலயத்தில் சுவாமிகள்



மூலவர் விநாயகருக்குப் பக்கத்திலுள்ள
வேலும், உற்சவ மூர்த்தியும்



உற்சவ விநாயகர் அலங்காரத்துடன்



காசியிலிருந்து வரவழைக்கப்பட்ட லிங்கம்



அம்பாள்



புதிதாக அமைக்கப்பட்டுள்ள
மூஷிகம், பலிபீடம்



ஸ்தூபிகளுக்காக இந்தியாவிலிருந்து
வரவழைக்கப்பட்ட கலசங்கள்

# கும்பாபிஷேகமும், மண்டலாபிஷேகமும்

திருமதி சி. அகிலேஸ்வரி
( வரணி ஆதீனம் - வரணி)



"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்பது பழமொழி. அதனாற்தான் பல அரசர்களும் தனவந்தர்களும் ஆலயங்களை எழுப்பி மக்களை வழிபாடு செய்ய வழி வகுத்தனர். கால மாற்றங்களினால், அக்கோவில்கள் பழுதடைந்து, அல்லது சிதிலமடைந்து போவதும் இயற்கையே. எனவே இக்கோவில்களின் இராஜகோபுரங்கள் விமானங்கள், மண்டபங்கள், கர்ப்பக்கிரகங்கள், பிரகாரங்கள், மதிற்சுவர்கள் போன்றவையைக் காலத்துக் காலம் பழுது பார்த்துத் திருப்பணி வேலைகளைச் செய்த பின்னர் கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது.

கும்பாபிஷேகம் பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாகுதல் செய்ய வேண்டும் என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன. இக்கும்பாபிஷேகத்தைப் பின்வரும் வகைகளில் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

(1) ஆவர்த்தம் (2) அனாவர்த்தம்

(3) புனராவர்த்தம் (4) அந்தரிதம்

### ● ஆவர்த்தம்

கோவில் கட்டப் பொருத்தமுள்ள ஒரு காணியில், புதிதாக ஒரு ஆலயத்தை அமைத்து, அதில் சிவலிங்கத்தையும், பரிவார மூர்த்திகளையும் பிரதிஸ்டை செய்து மகா கும்பாபிஷேகம் செய்யப்படுவதை ஆவர்த்தம் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

### ● அனாவர்த்தம்

நீண்ட காலமாகச் சரிவரப் பூசைகளைச் செய்யாதும், இயற்கை அனர்த்தங்களான பூகம்பம், மண்சரிவு, போன்றவற்றினாலும், தீயினால் சேதமானவை போன்ற விடயங்களால் பாதிப்புற்ற பழைய கோவில்களைப் புதிதாக மீண்டும் நிர்மாணம் செய்து, அதே மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்வதை 'அனாவர்த்தம்' என்று அழைக்கப்படுகின்றது.

### ● புனராவர்த்தம்

வழிபாடு இயற்றி வரும் ஆலயங்களில் காலம் போகப் போக இராஜகோபுரங்கள், மதிற்சுவர்கள், கூரைகள் போன்றவற்றைப் புதுப்பித்து அஷ்ட பந்தன மருந்தும் சாத்தி, அந்த மூர்த்திகளை அதே இடங்களில் பிரதிஸ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வதையே 'புனராவர்த்தம்' என்று சொல்லப்படுகிறது.

### ● அந்தரிதம்

கோவில் உட்பிரகாரத்துள் யாராவது மரணித்துவிட்டாலும், தவிர்க்கப்பட்ட விலங்குகள் (நாய், பன்றி போன்றவை) உள்ளே நுழைய நேர்ந்தாலும் செய்யப்படும் பிராயச்சித்தத்தை 'அந்தரிதம்' என்று கூறுவர். இதனைச் 'சம்புரோஷணம்' என்றும் ஆகமங்கள் இயம்புகின்றன.

### ● கும்பாபிஷேகக் கிரியைகள்

மூல மூர்த்தியிடமிருந்து இறைவனது ஆற்றல்களைக் கும்பங்களில் ஆவாகனம் செய்து பின்னர் யாக சாலையில், செய்யும் பூஜைகள், ஹோமங்களின் ஆற்றலால், கும்பத்தில் சேமித்து இறுதியில் கும்பாபிஷேகத்தால் மீண்டும் மூலமூர்த்தியிடம் இறைவனது ஆற்றலை ஒப்பிப்பது "மகா கும்பாபிஷேகம்" எனப்படும்.

கும்பாபிஷேகக் கிரிகைகள் அறுபத்தி நான்கு என்று சில வேத விற்பன்னர்கள் கூறுகிறார்கள். ஒரு சிலர் ஐம்பத்தியாறு என்றும் கூறுவர். எதுவாயினும், மிக முக்கியமான சில கிரியைகள் பின்வருமாறு:-

### (1) விக்னேஸ்வரர் பூஜை

கும்பாபிஷேகக் கிரியைகள் ஒரு தடங்கலுமின்றி நடைபெறுவதற்கு விநாயகர் வழிபாடு செய்யப்படுவதையே இது குறிக்கும்.

### (2) அனுக்ஜை

கும்பாபிஷேகத்தை நடாத்தும் சிவாச்சாரியார்; அதனை நடாத்தும் தகுதியைப் பெற்றவராக இருத்தல் அவசியம். விதிப்படி சிவ தீட்சை பெற்றவராக இருக்க வேண்டும். அனைவரினதும் அங்கீகாரத்துடன் இறைவன், இறைவியிடம் அனுமதிபெற்றுப் பின் அச்சிவாச்சாரியாரை நியமனம் செய்யும் கிரிகையே 'அனுக்ஞை' ஆகும்.

### (3) வாஸ்து சாந்தி

வாஸ்து புருஷன் என்ற அசுரன் இறைவனிடம் சாகாவரம் பெற்றவன் என்றும், எங்கே யாகம் நடைபெற்றாலும், அதைத் தடுப்பதே அவ்வசுரனின் வேலை என்று ஒரு ஐதிகம். கும்பாபிஷேகம் நடைபெறும் யாகசாலையில், இவனின் இடையூறு இல்லாமல் இருக்க, பிரம்மா போன்ற 53 தேவர்களையும் பூஜை முதலியவற்றால் திருப்தி செய்யும் சடங்குகளையே 'வாஸ்து சாந்தி' என்பர்.

### (4) மிருத் சங்கிரஹணம்

கும்பாபிஷேகத்தில் அங்குரார்ப்பணம் என்ற கிரியையும் இடம்பெறுகிறது. இதற்கெனப் பூமியை வெட்டி மண் எடுப்பார்கள். அவ்வேளை பூமியின் அதிபதியான இந்திரனையும், காவல் தெய்வங்களான அட்டதிக்குப் பாலகர்களையும், பிரம்ம தேவரையும் பிரார்த்தித்த பின்னரே மண்ணை வெட்டி எடுப்பர். ஆதலால் 'மண் எடுத்தல்' என்றும் இக்கிரியையைக் கூறுவதுண்டு.

### (5) காப்புக் கட்டுதல்

அனுக்ஞை மூலம் இறைவன், இறைவியிடம் அனுமதி பெற்றுக் கிரியைகள் நடத்தும் ஆசாரியாருக்கு, எதிர்பாராத இடையூறுகள் கும்பாபிஷேகக் காலங்களில் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு அவரது கையில் மந்திரித்து நூல் கட்டுதலைக், காப்புக் கட்டுதல் என்கிறோம். இதன் மூலம் கிரியைகள் நடாத்தும் பிரதம குருக்கள், இவை பூர்த்தியாகும் வரையில் தோஷங்கள், தீட்டுகள் அணுகாமல் காக்கப்படுகிறார்.

### (6) கும்ப ஸ்தானம்

கும்பாபிஷேகம் ஆகும்வரையில் இறைவனைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து அதை வழிபடுவது 'கும்பஸ்தானம்'. கும்பத்தை எவ்வாறு உடலாகப் பாவித்து வழிபடல் வேண்டும் என்பதை யோகஜம் என்கின்ற சிவாகமம் விரிவாகக் கூறுகிறது.

கும்பம் மாமிச உடலாகவும், அதனுள் உள்ள தண்ணீர் இரத்தமாகவும், அவற்றுள் இடப்பட்ட இரத்தினங்கள் சுக்லமாகவும், கருதப்படுகின்றன. கும்பத்திலுள்ள தர்ப்பைக் கட்டு நாடியையும், குடத்தின் மேல் சுற்றப்பட்டுள்ள முப்புரி நூல் நரம்புகள் எனவும், வஸ்திரத்தைத் தோலாகவும், குடத்தின் மேலுள்ள தேங்காயை முகமாகவும், தேங்காயின் மேல் வரித்துள்ள லம்ப கூர்ச்சம் சிகை யெனவும், மாவிலைகளைச் சிவபெருமானின் ஜடாபாரங்கள் என்றும் உச்சரிக்கப்படும் மந்திரங்கள் பிராணனாகவும் கருதப்படுவதாகச் சிவாகமங்கள் கூறுகின்றன.

### (7) கலாகர்ஷணம்

எந்த மூர்த்தியை எவ்ரூபத்தில் ஆவாகனம் செய்கிறோமோ அம்மூர்த்தியை அக் கும்பத்தில் வழிபடுவதாக எண்ணல் வேண்டும். அவ்வாறு ஆவாகனம் செய்வதற்கு கும்பத்தில் ஆகர்ஷணம் செய்து, குறிப்பிட்ட காலம் வரையில் கும்பத்திலேயே இருக்கச் செய்வதற்குத்தான் 'கலாகர்ஷணம்' என்று பெயர்.

### (8) யாக பூஜை

முறைப்படி இறைவனை ஆவாகனம் செய்து, யாகசாலையில் வைத்து ஒன்பது, ஐந்து, ஒன்று என்ற யாககுண்ட முறைப்படி ஒவ்வொரு காலமும் பூஜை செய்வது யாக பூஜையாகும்.

கும்பாபிஷேகத்திற்கு இவ்யாகசாலை மிகவும் முக்கியம். இவ்யாகசாலை மந்திரங்களாலும், தேவர்களாலும் புனிதமாக்கப்பட்ட இடமும் ஆகும். அத்துடன் சூரியனும், சிவபெருமானும் சகள நிஸ்கள மூர்த்திகளாகவும் விளங்குகின்றனர். மேலும் துவாரபாலகர்கள், மகா காளன், நந்தி, ஆகிய திக்அதிபர்களுடன் இலட்சுமி, விநாயகர், சப்தகரு முதலியவர்களும் நிறைந்துள்ள இவ்யாகசாலையின் நடுவில் வேதிகை குண்டம் அமைக்கப்படுகின்றது.

யாகசாலை ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது என்ற எண்ணிக்கையில் யாக குண்ட விதானம் அமைக்கப்படும். அதனைச் சுற்றிப் பதினாறு, இரு பத்தி நான்கு, முப்பத்திரண்டு பதங்களாகப் பல பதங்களையும் அமைப்பர். அதில் தீயை (அக்கினி) வளர்த்து, இறைவனுக்குச் செலுத்தப்படும் சிறந்த பொருட்களை அக்கினியில் இடுவார்கள். பாகனிடம் யானை கட்டுப்படுவதுபோல் "ஹவிஸ்" என்னும் இக்கிரியையால் இங்கு இறைவன் ஆசாரியார் இடத்தில் அன்பால் கட்டப்படுகிறார்.

இவ்வாறு முக்கிய இடம் வகிக்கும் யாகசாலையில் அஸ்டமூர்த்தி வழிபாடு, சூரிய சந்திர வழிபாடும் நடைபெறுகிறது. நிலத் தத்துவம், ஜலத் தத்துவம், அக்னி தத்துவம், வாயு தத்துவம், ஆகாச தத்துவம், போன்றவற்றையும் உணர்த்துகிறது.

### (9) ஸ்பர் சாகுதி

இவ்வாறு முக்கியமான இடமாகிய யாகசாலையில் செய்யப்பட்ட ஹோமங்களையும், அதனால் ஏற்பட்ட ஆற்றலையும், மூல பிம்பங்களிடத்தில் தர்ப்பைக் கயிறு, அல்லது நூல் மூலமாகவும் சேர்ப்பிப்பது மின் ஆற்றலைச் செப்புக் கம்பிகள் மூலமாகச் செலுத்துவது போல அமைகிறது. இக்கிரியை தங்கக் கம்பி அல்லது வெள்ளிக் கம்பி மூலமும் செய்வது உண்டு. இதனையே 'ஸபர் சாகுதி' என்று அழைப்பர்.

### (10) அஸ்ட பந்தனம்

மூர்த்தியையும், இயந்திரத் தகட்டையும் பீடத்தையும் ஒன்று சேர்ப்பதே அஸ்டபந்தனம் என்று கூறுவர். எட்டுப் பொருட்கள் சேர்க்கப்படுவதினாலும், இப்பெயர் பெற்றது. அப்பொருட்களாவன, சுண்ணாம்புக்கல், கற்பொடி, குங்கிலியம், கொப்பரக்கு, காவிக்கல், செம்பஞ்சு, உலர்ந்த லிங்கம், வெண்ணெய் என்பனவையாகும். இக்கலவையைப் பதிப்பதே 'அஸ்ட பந்தனம்' என்று கூறப்படுகிறது.

மூர்த்தியும், பீடமும் இயந்திரத்துடன் ஒன்று சேர்ந்த பின் நன்றாக இறுகுவதற்கு நல்லெண்ணெய் சாத்துதல் வேண்டும். இதைப் பக்தர்கள் எவரும் ஆசாரத்துடன் செய்யலாம். இதையே "எண்ணெய்க் காப்பு" என்றும், "எண்ணெய் சாத்தல்" என்றும் கூறுவதுண்டு. விக்கிரகங்களைத் தொட்டு எண்ணெய் சாத்தலாம்.

### (11) குடமுழுக்கு

யாகசாலையில் எந்த மூர்த்திக்கு எந்தக் குடம் வைத்துப் பூஜிக்கப்படுகிறதோ, அக்கும்பநீரை அந்த மூர்த்திக்கு அபிஷேகம் செய்வது "குடமுழுக்கு" எனப்படும். அவ்வாறு செய்கையில் அந்த மூர்த்தி அந்த விக்கிரகத்தில் எழுந்தருளுகிறார். அதன்பின்னர், அந்த விக்கிரகத்திலிருந்து பல தெய்வீக சக்திகள் வெளிப்படுகின்றன.


### (12) சிவலிங்கப் பிரதிஸ்டை

கும்பாபிஷேகக் கிரியைகளில் சிவலிங்கப் பிரதிஸ்டையும் மிகவும் முக்கியமாகும்.

### (13) மண்டலாபிஷேகம்

மகா கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்னர், கோ பூஜை, எசமான் அபிஷேகம், உற்சவ ஆசார்ய சம்பாவனை, எசமான் ஆசீர்வாதம், உபசாரம் போன்றவையும் நடைபெறும். அதன் பின்னர் தொடர்ச்சியாக 48 நாட்கள் கும்பாபிஷேகம் நடந்த கோவிலில் அபிஷேகம் செய்யப்படும். இதனையே "மண்டலாபிஷேகம்" என்று கூறுவர். இவ்வாறு நடைபெறுகையில் பிம்பமும், பீடமும் நன்கு அழுத்திப் பலம் பெறும் பொருட்டு நல்லெண்ணெய்யை தினமும் அபிஷேகம் செய்வார்கள். இக்கும்பாபிஷேகத்தால் ஏற்பட்டுள்ள சக்தியை மக்கள் இடைவிடாது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், ஒரு மண்டலம் தினமும் அபிஷேகம், சகஸ்ரநாமம், அர்ச்சனை ஆகியவை நடைபெறும். இறுதித் தினமான 48 ஆம் நாள் பதினொரு கும்பங்கள் வைத்து மகா அபிஷேகம் செய்து பூர்த்தி செய்வர்.

இத்தகைய கும்பாபிஷேகங்களைத் தரிசனம் செய்பவர்கள் தீவினைகள் அகன்று எல்லா நலன்களையும் பெறுவர். மனதுக்குச் சாந்தியும் அளிக்கும். ஆகவே யாமும் இவற்றில் கலந்து சாந்தி பெறுவோமாக.



கொழும்பு 11. செட்டியார் வீதியில் உள்ள ஸ்ரீ பழைய புதிய கதிர் வேலாயுத கோவிலில் இருந்து "வேல் விழாக்" காலங்களில் தங்க இரதத்திலும், வெள்ளி இரதத்திலும் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமிகள் ஒன்றுவிட்டு ஒரு வருடம் எழுந்தருளி பம்பலப்பிட்டி ஸ்ரீ பழைய புதிய கதிர் வேலாயுத கோவில் (123 & 339 காலி வீதி கொழும்பு 4) சென்று அடியார்களுக்கு அருள்பாலித்து திரும்புவது வழக்கம்.

# கொழும்பு நகர் ஆடி வேல் விழா வரலாறும் விழாக் கோவில்களும்



சி. சிவபாதசுந்தரம்.

*(இலங்கைத் துறைமுக அதிகார சபை)*

ஸ்ரீ தெக்ஷண கைலாசமெனப் பலராலும் அழைக்கப்பெற்றதும், நாயன்மார்களால் பாடப்பெற்ற திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய சிவஸ்தலங்களையும், மாணிக்க கங்கையின்பால் அமைந்ததும், அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றதுமாகிய கதிர்காமம் முருகஸ்தலத்தின் பெருமையையும் உடையது இலங்கை நாடு ஆகும்.

சிவபூமி, ஸ்வர்ணபூமி, குபேரபுரியெனவும் பல பெயர் கொண்ட கொழும்பு, இந்நாட்டின் தலைநகராகத் திகழ்வதையும் யாவரும் அறிவர். இந்நகரில் பிரசித்திபெற்ற துறைமுகமும் ஒன்று அமைந்துவிட்டதால், இது ஒரு வியாபார கேந்திர நிலையமாகவும் இருந்து வருகிறது. இதனால் பல இன மக்களும் இந்நகரில் வாழ்ந்து வருகிறார்கள். அந்நியர் ஆட்சிக் காலத்தில், குறிப்பாக ஆங்கிலேயர் எம்மை அடிமைப்படுத்தி ஆண்ட கால கட்டத்தில் பல நாடுகளில் இருந்தும் வியாபார நோக்குடன் பல இன மக்கள் இங்கு வந்து குடியேறினர். இவர்களில் எமது தாய்நாடாம் இந்தியாவில் இருந்தும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்தும், தமிழ் மக்கள் இங்கு வந்து குடியேறினர். இவ்வாறு இங்கு வந்து குடியேறிய தமிழ் மக்கள், வியாபாரத்தில் கண்ணியமாகப் பொருளீட்டிய போதும், மதம், மொழி, கலை, கலாச்சாரத்தையும் மறவாது பல அரிய பணிகளைப் புரிந்தார்கள். இந்நாட்டில் இவை நிலைத்து நிற்க நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் செட்டிமார் பல கோவில்களை இந்நாட்டில் எழுப்பியுள்ளார்கள்.

இவர்கள் இக்கோவில்களில் பல விழாக்களையும் பெரும் பொருட் செலவில் ஆண்டுதோறும் நடாத்தி வந்தார்கள். அவ்விழாக்களில் "ஆடி வேல் விழா" மிகவும் விமரிசையாகப் பன் நெடுங்காலமாகத் தலைநகரில் கொண்டாடப்பட்டு வந்தமையை யாவரும் அறிவர். கிட்டத்தட்ட நூற்று ஐம்பது (150) வருடங்களுக்கு முன்னரே இவ்விழா ஆரம்பித்தது பற்றி நாட்டுக்கோட்டை நகரத்தாரின் கோவில்களின் ஆவணங்களில் இருந்து தெரிய வருகிறது.

இவ் "வேல் விழா", ஆடி மாதம் பௌர்ணமியுடன் வருவதனாலும், கதிர்காமக் கந்தவேளின் தீர்த்தோற்சவத்துடனும் வருவதனாலும் மேலும் மேம்பாடடைகிறது. இவ்வேல் விழாவின் சிறப்பினை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பின்வருமாறு கவிதை வடிவில் வடித்துள்ளார்.

"பூதியணி வேதியர்கள் ஆதியடியார்கள்
    போற்றிவர மங்கல வியம்பல முழங்கச்
சோதிவரி வெள்ளிமணித் தேரின் மிசைந்தோன்றிச்
    சூரனுர மோடு கடல் வாரிதொலைவாக
மோதியெழு மாயமலை யாறுதுகள் போக
    முன்னுமுரு கேசனுயுர் முத்துமணி வைவேல்
வீதி வழி யாகவரு மாதியுலாக் காணும்
    விழிகள் கதிர் விழிகள்மணி விழிக ளொளி விழிகள்".

இத்தகைய சிறப்பு மிகு "வேல் விழா" வுடன் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் பெருநிதி கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கோவில்கள் நான்கு நேரடித் தொடர்புடையனவாக இருக்கின்றன. இவ்வேல் விழா ஆரம்பமாவதற்கு முதல்நாள் "காவடி ரதம்" பவனி வரும் விழாவும் நடைபெற்று வருகிறது. அவ்விழாவுடன் "பிள்ளைகள்" சமூகத்தினரால் தற்பொழுது நிர்வகித்து வரும் இரு கோவில்களும் தொடர்புடையனவாக இருக்கின்றன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அவ் ஆறு கோவில்களும் பின்வருவனவாகும் :

| விழா ஆரம்பிக்கும் கோவிலின் பெயர் | சுவாமி தரித்திருக்கும் கோவிலின் பெயர் | சுவாமிகள் எழுந்தருளும் இரதத்தின் பெயர் |
|---|---|---|
| ஸ்ரீ செம்மாங்கோடு கதிர்வேலாயுதர் கோவில்<br>141, முதலாம் குறுக்குத் தெரு,<br>கொழும்பு 11. | ஸ்ரீ செம்மாங்கோடு மாணிக்கப் பிள்ளையார் கோவில்<br>359, காலி வீதி,<br>கொழும்பு 4. | காவடி இரதம் |
| ஸ்ரீ பழைய கதிர் வேலாயுதர் கோவில்<br>239, செட்டியார் தெரு,<br>கொழும்பு 11. | ஸ்ரீ பழைய கதிர் வேலாயுதர் கோவில்<br>123, காலி வீதி,<br>கொழும்பு 4. | தங்க இரதம் |
| ஸ்ரீ புதிய கதிர் வேலாயுதர் கோவில்<br>251, செட்டியார் தெரு,<br>கொழும்பு 11. | ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுதர் கோவில்<br>339, காலி வீதி,<br>கொழும்பு 4. | வெள்ளி இரதம் |

## காவடி, வேல் விழாக்களின் வரலாறு

மோட்டார் வாகனங்கள் இந்நாட்டில் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருக்கவில்லை . நீண்டதூாரம், பிரயாணம் செய்பவர்கள் மாட்டு வண்டிகளில் செல்வர். கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச் செல்வோரும், இவ்வாறே செல்வர். கால் நடையாகச் செல்பவர்களும் உளர். ஆடி மாதம் பௌர்ணமித் தினத்தில் கதிர்காமக் கந்தனின் தீர்த்த உற்சவம் வருவதை யாவரும் அறிவர். ஆகவே இத்தினத்திற்குப் பத்துநாட்கள் முன்னர் கதிர்காமத்தில் அடியார்கள் நிற்பதற்காக இருமாதங்கள் முன்னதாகவே குழுக்களாக கரைப்பாதையாகச் செல்ல ஆரம்பித்து விடுவர். இவ்வாறு செல்பவர்களில் சிலர் முருகனுக்குக் காவடி எடுத்துச் சென்று தம் நேர்த்திக் கடனை நிறைவேற்றுபவரும் உளர். இவ்வாறேதான் கொழும்பில் வாழ்ந்த நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரும், பிள்ளைகள் சமூகத்தினரும் இதர குழுக்களும் கதிர்காமம் செல்வது உண்டு. கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் கொடிய வைசூரி நோய் பரவியிருந்ததாம். ஆதலால் இத்தொற்று நோயை வேறு இடங்களுக்குப் பரவவிடாது தடுக்கும் நோக்கத்திற்காக, அப்பொழுதிருந்த அரச அதிபர், கொழும்பில் வாழ்ந்த மக்களை நோய் மேலும் பரவாது இருப்பதற்காக வேற்று இடங்களுக்குச் செல்லாமல் தடுத்தார். அவ்வேளை, கதிர்காம யாத்திரிகர்கள் கதிர்காமம் செல்லும் காலமும் ஆனபடியால், ஒரு சில குழுக்கள் இடைவளியில் தாம் மேற்கொண்ட யாத்திரையைத் தொடர முடியாமல் வழிமறிக்கப்பட்டனராம்.

இவ்வாறே, கொழும்பில் இருந்து வெளிக்கிட்ட நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தாரையும், பிள்ளைகள் சமூகத்தினரையும், வேறு குழுவினரையும் பம்பலப்பிட்டிப் பகுதியில் செல்லும்பொழுது மறிக்கப்பட்ட பகுதிகளில்தான் தற்பொழுது இம் மூன்று பம்பலப்பிட்டிக் கோவில்களும் அமைந்திருக்கின்றன. இக்கோவில்கள் தற்பொழுது புறக்கோட்டையில் உள்ள கோவில்களுக்கு "உபய கதிர்காமம்" கோவில்களாக அமைந்திருக்கின்றன.

யாத்திரை தடைப்பட்டதைப் பொறுக்க முடியாத பக்தர்கள், தமது காவடிகளுடன் அயலில் இருந்த, தற்பொழுது கோவில்களாக எழுந்தருளியிருக்கும் காணிகளில் காவடிகளை இறக்கிவிட்டு முருகப் பெருமானின் மேல் பழியைப் போட்டுவிட்டுத் தாம் திரும்பி வீடு செல்லோம் என்று இருந்து விட்டனராம். பக்தர்களின் இறைபக்தியை மெச்சிய கந்தவேளும் கருணை கூர்ந்து, அவர்களிடம் கனவில் தோன்றி, இனிமேல் இதையிட்டுக் குறைகொள்ள வேண்டாமென்றும், இனிவரும் காலங்களில் கதிர்காமக் கந்தனின் உற்சவ காலங்களில் கொழும்பில் உள்ளவர்களுக்கு இவ்விழாவின் மகிமையை எடுத்துணர்த்தும்படி கூறப்பட்டதாம். இதன்படிதான் பின்னர் "வேல் விழா" நிகழ்ச்சிகள் கொழும்பில் ஆரம்பமாகின.

"வேல் விழா" ஆரம்பிக்கப்பட்ட சரியான ஆண்டு தெரியாத போதிலும், செட்டியார் தெருவில் இலக்கம் 239ல் உள்ள ஸ்ரீ கதிர் வேலாயுதர் கோவிலிலிருந்துதான் (பின்னர் பழைய கதிர் வேலாயுதர் கோவில் ஆனது) முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. கி. பி. 1839ல் இவ்வீதியில் உள்ள 251ம் இலக்கத்தில் புதிய கதிர் வேலாயுதர்

கோவில் ஆலயம் எழுப்பப்பட்டது. அதன்பின் ஒரு வருடம் ஸ்ரீ பழைய கதிர் வேலாயுதர் கோவிலில் இருந்து "தங்க இரதத்தில்" ஸ்ரீ கதிர் வேலாயுதப் பெருமானும், அடுத்த ஆண்டு ஸ்ரீ புதிய கதிர் வேலாயுதர் கோவிலில் இருந்து "வெள்ளி இரதத்தில்" ஸ்ரீ முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் எழுந்தருளுவார். இவை முறையே பம்பலப்பிட்டியிலுள்ள உபய கதிர்காமங்களான ஸ்ரீ பழைய கதிர் வேலாயுதர் கோவிலையும் (123, காலி வீதி, கொழும்பு 4) ஸ்ரீ புதிய விநாயகர் கதிர் வேலாயுதர் கோவிலையும் (339, காலிவீதி பம்பலப்பிட்டி) வந்தடையும். இக்கோவில்களின் நிலங்கள் 1852 – 1872க்கு இடைப்பட்ட காலங்களில் வாங்கப்பட்டன.

இவ் வேல் விழா ஆரம்பமாவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர், அதாவது ஆடி மாதப் பௌர்ணமித் தினத்துக்கு மூன்று நாட்கள் முன்னர் வருடா வருடம் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள செம்மாங்கோட்டார் ஆலயத்தில் இருந்து "காவடி இரதத்தில்" ஸ்ரீ முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் எழுந்தருளி பம்பலப்பிட்டி ஸ்ரீ செம்மாங்கோட்டுப் பிள்ளையார் (359, காலி வீதி கொழும்பு 4 ) கோவிலை வந்தடைந்து அங்கு இரு தினங்கள் வீற்றிருந்து மீண்டும் எதாஸ்தானத்தை வந்தடைவார்.

"காவடி" இரதம் புறக்கோட்டையிலிருந்து வெளிக்கிட்ட மறுதினம் முன்னர் குறிப்பிட்டபடி வேல் இரதம் ஆண்டுக்கு ஒருமுறை செட்டியார் தெருவிலுள்ள ஸ்ரீ பழைய கதிர் வேலாயுதர் கோவிலில் இருந்து "தங்க இரதத்திலும்" அடுத்த ஆண்டு ஸ்ரீ புதிய கதிர்வேலாயுதர் சுவாமி கோவிலில் இருந்து "வெள்ளி இரதத்திலும்" மாறி மாறிச் செல்வது வழக்கம். வேல் விழாவின் போது இவ் இரதங்களில் ஆரம்பகாலத்தில் கதிர்காமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பிரம்பு, மயில் தோகை போன்றவற்றையும் இன்றும் இவ்இரதங்களில் எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவற்றை வெள்ளிப் பேளைகளில் வைத்துச் செட்டிமார்கள் பேணி வருவது குறிப்பிடத்தக்கது.

உபய கதிர்காமக் கோவிலில் இருதினங்கள் தங்கியபின் வேல் இரதத்தில் மீண்டும் பௌர்ணமித் தினத்தில் கதிர்காமக் கந்தன் மாணிக்க கங்கையில் தீர்த்தமாடிய தீர்த்தத்தை மிக அண்மைக் காலத்தில் இருந்து எடுத்து வந்து சுவாமிக்கு அபிடேகம் செய்ததன் பின்னர் மூன்றாம் நாள் மாலை மீண்டும் சுவாமிகள் செட்டியார் வீதியில் உள்ள எதாஸ்தானத்தை வந்தடைவதுடனும், பின்னர் "இடும்பன் பூசை" யுடனும் "வேல் விழா" நிறைவுறும்.

இவ்விழா நடைபெறும் ஐந்து நாட்களும், தமிழ் நாட்டிலிருந்து வருகைதரும் பல இசைக் கலைஞர்கள் இக்கோவில்களில் பல இன்னிசைக் கச்சேரிகளை நடாத்துவர். பக்தர்கள் இன-மத பேதமின்றி பம்பலப்பிட்டியிலுள்ள இம் மூன்று கோவில்களுக்கும் மாறி மாறி இரவு பகலாகச் செல்லுவார்கள். பல மணிக்கடைகள், தின்பண்டக் கடைகள், கரும்பு விற்கும் கூட்டம் முதலியவற்றையும் இக்காலங்களில் காணமுடியும்.

சிறிய மடாலயமாகத் தோன்றிய கோவில்கள், படிப்படியாகச் செய்யப்பட்ட திருப்பணி வேலைகளால் புதுப் பொலிவுடன் விளங்கி வருகின்றன. அவ்வாறான செட்டிமாரின் கோவில்களில் ஒன்றான இந்த ஸ்ரீ விநாயகர் புதிய கதிர் வேலாயுதர் கோவில் (339, காலி வீதி, கொழும்பு 4) இன்று வானளாவிய கோபுரத்துடன் நிமிர்ந்து நிற்பது இறைவனினது கடாட்சமும், திரு. ஆர். எம். பழனியப்பச் செட்டியார் (தர்மகர்த்தா சபைத் தலைவர்) அவர்களினது முயற்சியினாலுமே ஆகும். அவரின் நற்பணி மேலும் பல வருடங்கள் தொடரவும் "வேல் விழா" தொடர்ந்து நடைபெறவும் இறைவன் அருள் புரிவானாக.

I believe that each individual soul is created by Lord Siva and is identical to Him, and that this identity can be and will be fully realized by all souls when the triple bondage of anava, karma and maya is removed through His Grace.

*Courtesy* - Subramuniya Swamy

# விநாயகர் தத்துவம்

திருமதி வி. சி. சர்மா



நாம் செய்யமுற்படும் எந்தக் காரியத்தையும் இடையூறின்றி எதிர்பார்த்த இலக்கை அடைவதை நோக்கமாக விநாயகர் அருளை வேண்டி வழிபாடு செய்வது மரபாகும். விக்கினங்களை விலக்கி அருள் பாலிக்கும் கடவுள் என்று கருதுவதால் விக்கினேசுரர் என்ற பெயர் ஏற்படலாயிற்று. தன்னையே கதி என்று வந்தவருக்கு மோட்ச நிலையைக் கொடுப்பதால் கணபதி என்ற பெயர் ஏற்படலாயிற்று. கணபதி என்ற சொல்லில் 'க' என்பது ஞானம், 'ண' என்பது மோட்சம், 'பதி' என்பது தலைவன் எனப் பொருள்கொள்வர்.

விநாயகர் பிரணவ வடிவமானவர் என்றும் கொள்ளப்படுவார். ஓம் என்பது பிரணவப் பொருள் என்று விரிவடையும். வேதத்தின் முதல் எழுத்து கணபதியின் சுத்தஞான வடிவம் என்பதை பிள்ளையாரின் திருவுருவம் விளக்குகின்றது. இதனை 'கைவேழமுகம்' என்பர். இதனையே கந்தபுராணம் 'முந்தை வேத முதலெழுத்தாகிய எந்தை என்றும், 'மூலமொழிப் பொருளா மெந்தை என்றும் தாரகப் பிரமமான மாக்காய முகத்து வள்ளல் என்றும் காட்டுகிறது.

காமிக ஆகமமானது பிரணவத்தின் வரிவடிவத்தினது முற்பகுதி நட்சத்திர வடிவமாகவும் பிற்பகுதி தண்டவடிவாகமும், ஆகவே இந்த இரண்டும் சேர்ந்து வடிவம் ஊமை எழுத்து என்றும், மூலமனு என்றும் பிள்ளையார் சுழி என்றும் மௌனக் கரம் என்றும் அழைக்கப்படும்.

விக்கினராஜர் பிரணவ ரூபத்தினராக இருப்பதைக் காட்ட மோதகம், தேங்காய், விளாம்பழம், வில்வப் பழம், மாதுழம் பழம் போன்ற உருண்டை வடிவான பொருட்கள் நிவேதிக்கப்படுகின்றன. கணேசன் சத்துவ குணத்தினன் என்பதை எடுத்துக் காட்டும்முகமாக தேன், பால், பருப்பு, சர்க்கரை, அவல் முதலான பொருட்கள் படைக்கப்படுகின்றன.

விநாயகர் யானைமுகம், பெருத்த வயிறு, மூன்று கண்கள் இரு கால்கள், அமர்ந்த கோலம், கயமுகாசுரனைக் கொல்வதற்காக முறித்த கொம்பு, அங்குசம், பாசம், மோதகம் போன்றவற்றை ஏந்திய கைகள், வளைந்த துதிக்கை, பெருச்சாளி வாகனம் போன்ற அம்சங்களைக் கொண்டு காட்சி தருவதை நாம் எங்குங் காணலாம்.

கஜமுகாசுரன் என்ற அரக்கனால் ஏற்படுத்தப்பட் ட கொடுமைகளை அடக்கி தேவர்களை இரட்சித்து, அந்த அசுரனை ஆட்கொண்ட திருக்கோலமே விநாயகத் திருவுரு என்பர்.

அண்ட இராச்சியங்களையெல்லாம் ஓங்காரத்துள் அடங்கியுள்ளதைக் காட்டுவதற்காக தாழி வயிறு குறிப்பிடப்படுகின்றது. இச்சா சக்தி, கிரிஜா சக்தி ஞானாசக்தி என்பனவற்றை முக் கண்களும் குறிக்கும். பரஞானத்தால் எதனையும் ஆராய்ந்து உய்த்து அறிய வேண்டும் என்பதை நெற்றிக் கண் உணர்த்துகிறது. விரித்த காதுகள் பக்தர்களின் வேண்டுதல்யாவற்றையுமே செவி மடுத்து அருள் பாலிக்க வல்லவர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆணவ மலமாகிய யானைப் பாசம் என்ற கயிற்றால் பிடித்து அங்குசத்தால் அடக்கி, மறைத்தல் என்ற தொழிலைச் செய்து ஆன்மாக்களை ஈடேற்றுபவர் என்பதை விளக்குவதற்காகவே பாச அங்குசங்களைக் கையில் கொண்டுள்ளார் என விளக்கம் விரியும்.

# ஆலய வழிபாட்டில் செய்வனவும் செய்யத்தகாதனவும்

மானியூர் சி. குமாரசாமி

*(இளைப்பாறிய ஆசிரியர்)*



"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார் ஔவைப்பிராட்டியார் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்பதும் ஒரு முதுமொழி. இவ்விரண்டு கூற்றுக்களும் ஆலயத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்துகின்றன. மேலும் அப்பர் அடிகள் "திருக்கோயில் இல்லாத திருவிலூரும், திருவெண்ணீறணியாத திருவிலூரும் இவையெல்லாம் அடைவிகாடே" என்றார். ஒருக்காலும் திருக்கோவில் சூழாதவரையும் அப்பர் கண்டிக்கிறார். ஆலயம் என்பது ஆன்மா லயிக்கும் இடம் என்று கூறப்பட்டுள்ளது. எங்கும் வியாபித்து இருக்கும் இறைவன் ஆலயத்தில் அடியார்களுக்கு அருள் செய்வதன் பொருட்டு எழந்தருளியுள்ளார். பசுவின் உடம்பில் செறிந்துள்ள இரத்தமே பாலானாலும் அதன் மடியில் இருந்துதான் பெறுகின்றோம்.

ஆகமரீதியில் ஆலயம் அமைக்கப்பட்டுகின்றது. மனித உடம்பினையொட்டியே ஆலயம் அமைக்கப்படுகின்றது. இத்தகைய ஆலயத்தில் அடியார்களாகிய நாம் எங்கனம் வழிபடல் வேண்டுமென்பதை பல நூல்கள் எடுத்தியம்புகின்றன. முக்கிய வழிபாட்டு முறைகளை நோக்குவோம்.

சைவர்களாகிய நாம் காலையில் எழுந்து நீராடிய பின்னர் தோய்த்துலர்ந்த ஆடையுடுத்தி கோயிலுக்குச் செல்லுதல் முறையாகும். போகும்போது வெறுங்கையுடன் செல்லாது மலர்கள், கற்பூரம், தேங்காய் போன்றனவற்றை எடுத்துச் செல்லல் வேண்டும். ஆலயத் திருக்குளத்தில் எமது கால்களைச் சுத்தம் செய்தபின் கோபுரத்தை வணங்கி விட்டு உட்செல்லுகிறோம். முதலில் விநாயகரை மும்முறை குட்டி வணங்கிய பின்னர், மூலஸ்தான மூர்த்தியைக் கும்பிடல் வேண்டும். ஆலயத்தில் மூலஸ்தான மூர்த்திக்கு திரைபோட்டிருந்தால் நாம் ஆலயத்தை வலம் வருதல் தவறாகும். மேலும் அபிஷேகமோ அன்றி தீபாரதனை நடைபெற்றிருக்கும் வேளையிலும் நாம் வலம் வருதல் தவறாகும். அப்போது நாம் நடைபெறும் அபிஷேகத்தையோ அன்றி தீபாராதனையையோ பார்த்தோமானால் எமது மனமானது தாவித்திரியாது அடங்கும்.

கர்ப்பக் கிரகத்தில் (மூலஸ்தானம்) திரை போடாதிருந்தால் நாம் வலம்வந்து பரிவார மூர்த்திகளை வணங்குலாம். வலம் வருதல் மூன்றுமுறை, ஐந்துமுறை என்று எண்ணிக்கையில் செய்த பின்னர் பிரதான வாசலில் அட்டாங்க வணக்கமோ பஞ்சாங்க வணக்கமோ செய்யலாம். இவற்றைச் செய்யும் போது நாம் கால்களை கிழக்குப் புறத்தேயும் வடக்குப் புறத்தேயும் நீட்டாதிருத்தல் உத்தமம். கிழக்கே பிரதான வாயில் உள்ள ஆலயங்களில் இம்முறைகளைக் கடைப்பிடித்தல் சிரமமன்று. ஆனால் வடக்கிலும், தெற்கிலும் பிரதான வாயில்கள் உள்ள ஆலயங்களில் நாம் சிந்தித்து அவதானமாக அட்டாங்க வணக்கத்தையோ, பஞ்சாங்க வணக்கத்தையோ செய்ய வேண்டும்.

ஆலயத்தில் திரை நீக்கப்பட்ட பின்னர் அடுக்குத் தீபம் காட்டப்படுகிறது. மங்கள வாத்தியங்கள் ஒலிக்கின்றன. இன்னும் சங்கு, சேமக்கலம், மணி இவற்றின் ஓசைகள் எமக்கு மனோரம்மியத்தைத் தருகின்றன. அடுக்குத் தீபத்தின் பின்னர் ஒற்றைத் தீபம் காட்டப்படுகின்றது. இதன் அர்த்தம் யாதெனில் கடவுள் பலவாறாக காட்சி தந்தாலும் அவர் ஒருவரே!

தீபாரதனைகள் முடிந்த பின்னர் அர்ச்சகர் மலரால் இறைவனை வழிபடுகின்றார். அப்போது நாமும் மௌனமாக நின்று வணங்குதல் வேண்டும். சோடச உபசாரங்கள் இறைவனுக்கு நடத்தப்படுகின்றன. பின்னர் பஞ்சாலாத்தி காட்டப்பட்டவுடன் நிசப்தம் நிலவுகிறது. அர்ச்சகர் வேதபாராயணம் செய்தபின்னர் பஞ்சபுராணம் பண்ணுடன் ஓதப்படுகிறது. தேவாரப் பாடல்கள் பண்ணுடன் பாடப்பட வேண்டியது நியதி. அவை கிரமமாக தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்ற முறையில் பாடப்படுகின்றன. முருகன் ஆலயத்தில் திருப்புகழும், அம்மன் ஆலயத்தில் அபிராமி அந்தாதியும் பாடப்படலாம். இப்பாடல்கள் பாடப்படும்பொழுது வழிபடுவோராகிய நாம் சத்தம் செய்யாது பிறரையும் (இயன்றளவு) சத்தம் செய்யாது தடுத்தும் அப்பாடல்களைச் செவிமடுத்தல் வேண்டும். காரணம் யாதெனில் தேவாரங்கள் வேதசாரமானவை. அவை அருட்பாடல்கள்.

திருஞானசம்பந்தப் பெருமான், அப்பர் அடிகள், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், எமது சமய குரவராவர். அவர்கள் ஆலயங்கள் தோறும் சென்று தீந்தமிழில் பாடியன அமிர்தம் போன்றவை. எமது சமயத்திற்கும் மக்களுக்கும் பல இன்னல்கள் வந்ததுற்ற போதும் இந்துசமய குரவர்களே எமது சமயத்தினைக் காப்பாற்றியவர்கள் என்பதை நாம் மனதிற்கொள்ளல் வேண்டும். பெரிய புராணத்தில் நாயன்மார் வரலாறுகளைப் படித்தால், அவர்கள் எவ்வளவு கஷ்டங்கள் வந்த போதிலும் மனத்தைத் தளரவிடாது உறுதியாக இருந்து அவற்றையெல்லாம் தாங்கினார்கள் என்று அறியலாம். அவர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் தாமரை இலை நீர்போல உலகப்பற்றின்றி வாழ்ந்தனர். ஆகவே, சைவர்களாகிய எமக்கு பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணம் வழிகாட்டு நூலாக அமைகிறது. அதில் ஆலய வழிபாடு பற்றிப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

ஆலயத்தை வலம் வந்த பின்னர் விபூதிப் பிரசாதம் பெற்று ஓர் இடத்தில் வடக்கு முகமாக இருந்து சில நிமிடங்களாவது தியானம் செய்தல் வேண்டும். சிவ தீட்சை பெற்றவர்கள் பஞ்சாட்சர ஜெபம் செய்யலாம். ஆலயத்தின் அமைதியைப் பேணுதல் முக்கியமானது.

ஆலயத்தில் விசேட அபிஷேகம், திருவிழாக்களை நாம் செய்விக்கும் பொழுது தருப்பை அணிகிறோம். ஆண்கள் வலக்கையிலுள்ள ஞான விரலிலும், பெண்கள் இடக்கை விரலிலும் தருப்பை அணிவதே முறையாகும்.

நாம் சண்டேசுவரரை வணங்கும்போது மூன்றுமுறை கைதட்டி வணங்கிய பின்னர் சென்றவழியே திரும்பவேண்டும். அவரை வலம் வருதல் தவறாகும்.

அட்டாங்க வணக்கமோ, பஞ்சாங்க வணக்கமோ கொடி மரத்திற்கும், பிரதான வாசலுக்கும் இடையில் செய்யப்பட வேண்டியது. மகா மண்டபத்துள் இவை செய்யப்படக்கூடாது.

சரியைத் தொண்டினை சிறப்பித்துக்கூறும் அப்பரடிகள் மேல்வருமாறு எம்மை நெறிப்படுத்துகின்றார்.

நிலை பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புணர்ந்தேத்திப் புகழ்ந்துபாடி
தலையாரக் கும்பிட்டு கூத்துமாடி
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடைஎம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே

மேலும் அவர் திருவங்கமலையில் உடம்பின் உறுப்புக்களை விழித்துக்கூறுமிடத்து,

கால்களாற் பயனென் – கறைக்
கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென்

ஆகவே, அப்பரடிகள் கூறியவாங்கு நாம் ஒழுகினோமானால் எமக்கு மனநிம்மதி, தொண்டு செய்வதனால் சந்தோஷம், இறை வணக்கத்தினால் உளத்தூய்மை, இறைவன் எமக்கு அருளிய இவ்வுடம்பினாலே அவருக்கே அன்புடன் சேவை செய்வதனால் இவ்வுடம்பினை அர்ப்பணிக்கும் பெரும்பேறு. மேலும் இறைவனுடன் நாம் இருக்கின்றோம் என்ற எண்ணத்தால் எம்மை அணுகுகின்ற பாவம் பழியினின்றும் விலக்கப்படுகின்றோம்.

***(இக்காலத்தில் நடைமுறைப்படுத்தக் கூடியனவற்றையே நாம் இங்கு குறிப்பிட்டுள்ளோம்.)***

# இறைவனின் உறைவிடங்கள்

பா. சி. சர்மா
(அதிபர், கொழும்பு இந்துக் கல்லூரி)




இறைவனை மனத்தூய்மையுடன் அமைதியாகத் தியானித்து வழிபடும் இடங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன. இவை தேவ கிருகம், தேவாகாரம், பிரசகிதம், தேவாலயம், தேவாயதனம், தேவ மந்திரம், தேவகுலம், தேவபவனம், தேவஸ்தானம், தேவமேஸ்வம், சைத்திரியம், ஷேத்திரம், அர்ச்சாக்கிரகம், ஸ்தலம் எனப் பலவாறாக அழைக்கப்படுகின்றன.

பழம் பெருமை வாய்ந்த கோயில்கள் இயற்கை அழகு ததும்பிய இடங்களிலேயே அமையப்பெற்றிருந்தன. மக்கள் முதன் முதலில் ஆற்றங்கரையிலும், வண்ணமரச் சோலைகளிலும் மற்றும் குன்றின் உச்சிகளிலும் தெய்வ உருவங்களைச் சமைந்து வழிபட்டு வந்தனர். பின்னர் காலப் போக்கில் இது வளர்ச்சிபெற்று கட்டடங்களாகவும், முறையான கோயில்களாகவும் அமையப்பெற்றன.

'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு' என்பது தத்துவஞானி ஒருவருடைய வாக்கு. பிண்டம் என்பது எமது உடல். அண்டம் என்பது எங்கும் வியாபித்துள்ள பரந்த வெளியாகும். பரந்த வெளியிலே குடிகொள்வதாகக் கருதப்படும் இறைவன், எமது உடலிலும் குடியிருக்கிறான் எனவும், மனிதனுடைய உடலமைப்பு முறையிலேயே ஆகம முறைப்படி கோயில்கள் எழுப்பப்பட்டன எனவும் கருதப்பட்டன. ஆகவே கோயில் என்பது மனித உடலின் புறச் சின்னம் என்று கூறினால் அது மிகையாகாது. எனவே உடலின் தத்துவங்களுக்கேற்ப, புறச்சின்னமாகிய கோயிலை அமைக்க வேண்டும் எனப் பல்வேறு ஆகம நூல்கள் இயம்புகின்றன.

கோயிலைச் சுற்றி சுற்றுமதிலமைத்து நாற்திக்கிலும் பெரிய வாயில்கள் வைத்து, அதன் மேல் கோபுரங்கள் கட்டி அதனைத் தூலலிங்கம் எனப் பெயரிட்டு வழிபடுவர். கோபுரமானது அரச கோபுரம் என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிடப்படும். இந்த அரச கோபுரத்திலே பல்வேறு உருவங்கள் அமைக்கப்படும். இவற்றில் பல ஆசாபாசங்களை வெளிப்படுத்துபவையாகவும், மற்றும் சில இவற்றை விலக்குபவையாகவும் தத்துவப் பொருள் கொண்டவை. அன்றாட உலகியல் காட்சிகளை தத்ரூபமாக இவை துலாம்பரப்படுத்துபவையாக அமையும். வாயில்கள் மேல் கோபுர அடுக்கு ஓங்கி ஒற்றைப்படையாக ஒன்றின்மேல் மற்றொன்று நின்ற ரீதியில் அமைவுற்றிருக்கும்.

மூன்று அடுக்குகளைக் கொண்டவை நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று அவத்தை நிலைகளைக் குறிக்கும். இது ஐந்தாக அமைந்தால் ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றைக் குறிக்கும். கோபுர அடுக்கு ஏழாகவிருந்தால் பஞ்சேந்திரியங்களுடன் மனம், புத்தி ஆகியவற்றைக் குறிக்கும் என்பர். கோபுர அடுக்குகள் எத்தனை அமைந்திருந்தாலும் கீழ் மட்டக் கோபுர வாயில் வழியாகவே

கோயிலுக்குள் புக முடியும். இது போலவே மனம் ஒரு நிலைப்பட்டால் மட்டுமே கடவுள் மீது நாட்டம் ஏற்பட்டு பேரானந்தப் பெரு வாழ்வுக்கு வழிகோலும்.

கோபுர வாசல் வழியாக உட்புகுந்தால் முதலில் தெரிவது கொடிக் கம்பமும், பலி பீடமுமாகும். பலி பீடத்தின் அண்மையில் சென்று நிலத்தில் விழுந்து வணங்கும் போது எங்கள் மனதிலே உள்ள கீழான எளிய இயல்புகள் யாவற்றையும் பலிகொடுத்து உயர்ந்த எண்ணங்களுடனும், நம்பிக்கையுடனும் எழுந்திருக்கின்றோம். பலிபீடத்தோடு உள்முகமாக ஒட்டியிருப்பது கர்ப்பக்கிரகத்துள் இருந்து அருள்பாலிக்கும் தெய்வ மூர்த்திக்குரிய வாகனமாகும். இது ஆன்மாவைக் குறிக்கும். அதனோடு ஒட்டியிருப்பது துவஜஸ்தம்பமாகும். இதன் முகப்புகள் உள்நோக்கி அமைந்திருக்கும். ஆன்மா உள்முகமாக இறைவன் பால் நோக்கியவாறு இருக்கும். இறைவனை அடைவதே ஆன்மாவின் இறுதியான குறிக்கோள் என்பதை இது காட்டுகிறது. இறைவனின் ஊர்த்தியாகிய வாகனம் இறைவனையே எப்போதும் நோக்கியவாறு அமைந்திருப்பது மனித மனம் கடவுளை அடைவதே நோக்கமாக கொண்டிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகிறது. வாகனத்துக்கும் மூலவருக்கும் இடையில் பக்தர்கள் செல்லலாகாது என்பது இத்தத்துவபந்தந்துக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்பதை அறிவுறுத்துவதற்காகவேயாம். ஆகம விதிப்படி காற்றும் வெளிச்சமும் அதிகம் பரவாத இடமாக கருவறை அமைந்து திரைச் சீலையினால் மூல மூர்த்தி மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பக்தன் இறைவனைக்காணக் குறிப்பிட்ட பூசை நேரம் வரும் வரை காத்திருக்கிறான். மணியோசையுடன் தீப ஒளி ஏற்றப்பட்டு திரை விலக்கப்படுகிறது. தீபாராதனையாலும், கர்ப்பூர ஆராத்தியினாலும் ஒளியுண்டாகி மூலவர் பக்தனுக்குக் காட்சியளிக்கிறான். மனித மனமே கற்பூரமாகிறது. பூசையானது ஞானக் காட்சியின் புறத்தோற்றம் எனலாம். மனதை உள்முகமாக்கும் ஆன்மீகச் சாதகன் முதலில் இருளையே தன்னுள் அனுபவித்துக் காண்கிறான். பின் சாதனா சக்தியினால் ஞான ஒளி பெற்று பிறவாயாக்கைப் பெரியோனுடன் ஒன்றிவிடுகிறான்.

கோயிலிலே மூர்த்திகளுக்கு பல்வேறு நித்திய, நைமித்திய, காமிகக் கிரியைகள் நடைபெறும். இங்கு பூஜை, புனஸ்காரங்களும், அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நைவேத்திய புஷ்பாஞ்சலிகளும், தோத்திர பாராயணங்களும்; திருவுலா வைபவங்களும் பொதுப்படையாக நடைபெறுவது, ஆன்மசாதகன் புரிபவன் அல்லது அன்றைய கால கட்ட மக்கள் சமுதாயம் பெற்றுள்ள ஆன்மீக மனப்பக்குவத்தின் புறச் செயல்களின் பிரதிபலிப்பாகும்.

வழிபாடு செய்பவன் அகமும், புறமும் தூயமனத்துடையவனாக ஒழுக வேண்டும். இவ்வாறான ஆராதனைகளினால் மனம் தெளிவடைவதே அடிப்படை நோக்கமாகும். இறைவனுக்குப் படைக்கப்பட்ட பிரசாதங்கள் ஆன்ம சாதகனுடைய அந்தக் காரணங்களைத் தூய்மையடையச் செய்யும். அத்தோடு பிரசாதத்தை எல்லோரும் சமமாகப் பங்கிட்டு உண்பதால் உயர்வு, தாழ்வு அற்று ஆண்டவன் முன் அனைவரும் சமத்துவமானவர்கள் என்ற கோட்பாடு ஏற்பட வழி ஏற்படும்.

ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகள் அனைத்தும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாகத் தீபாரதனையின் போது மூலவருக்கு முன் உள்ள திரை அகற்றப்பட்டு மங்கள ஜோதியில் இறைவன் திருவுரு புலப்படுகிறது. தீபாரதனையின் போது முதலில் பல தீபங்களைக் கொண்ட அடுக்குத் தீபம் ஒன்று வலமாக ஆராதனை செய்யப்பட்டு, பின் தொடர்ச்சியாக குறைந்த எண்ணிக்கையிலான தீபங்களைக் கொண்ட விளக்குகளினால் ஆராதனை நடத்தப்பட்டு இறுதியாக ஒரு சுடரைக் கொண்ட ஒற்றை ஒளித் தீபம் காட்டப்படுவதன் உட்கருத்து ஒன்றாய் உள்ள பரம்பொருளே எண்ணற்ற ஆன்மாக்களாக உள்ளன என்பதாகும். கோயிற் கிரியையில் ஐம்பொறிகள் புலன்களை ஈர்க்கின்றன. உதாரணமாக ஒளியில் கிரியைகளை கண்ணால் பார்க்கிறோம். மணியோசை, சங்கநாதம், மங்கள நாதஸ்வர மேள ஓசை, வேதகோஷ பிரார்த்தனை நாம சங்கீர்த்தனம் போன்றவற்றைக் காதுகளால் கேட்கின்றோம். நறுமண மலர்களால் தசாங்க தூபம் முதலியன நாசியால் நுகரப்படுகிறது. பிரசாதம் நாவால் சுவைக்கப்படுகிறது. மெய்யினால் துதிக்கிறோம்.

இந்தியாவின் வடபகுதிகளிலே மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களிலே கி.மு. 2,500 ஆண்டுகளிலிருந்த நகரங்களையும் கட்டடங்களையும், பற்றிய விபரங்களைத் தற்போது நடைபெற்றுவரும் புதைபொருள் ஆராச்சிகள் நிரூபிக்கின்றன. சிந்து நதி நாகரிகத்துக்குப் பின்னர் கி.மு. 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்ட மக்கள் வாழக்கை முறைகளை நூல்கள் வாயிலாக அறியலாம். அசோகர் காலத்திலும் அதற்குப் பின்னரும் கற்கள் போன்றவற்றிலான நிலையான கட்டடங்கள் இருந்தனவென்பதற்கான ஆதாரங்களாகச் சிதைபாடுகள் உள்ளன. குப்தர் காலத்திருந்து இந்து சமயக் கோயில்களின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கை அறிந்துகொள்வதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன.

இக்கால கட்டங்களில் கோமில் கட்டும் முறை விதிப் பிரமாணங்கள் போன்றவை பற்றிய விரிவான நூல்கள் ஏட்டுப் பிரதிகளாகப் பெறக் கூடியதாக இருந்தது.

இந்துக் கோயில்களின் வளர்ச்சிப் போக்கில் முதற்படியாக நன்கு செப்பனிட்ட கருங்கற்களைக் கொண்ட சிறிய சதுரக் கோயில்கள் கட்டப்பட்டன. இவ்வகையான கோயில்களின் கர்ப்பக்கிரகமானது அன்று எளிமையான சிறிய மண்டபமாகப் பெட்டி போன்ற அமைப்புடன் கருவறையின் மேல் சிகரங்களோ, விமானங்களோ இல்லாது காட்சியளித்தன. பின்னர் வளர்ச்சிப் போக்கில் சிறு சிறு சிகரங்கள்மேற் கோப்புக் கட்டடங்களாக கருங்கற்களாலும் செங்கற்களாலும் அமையப் பெற்றன. இவ்வகையிலே ஆரம்பகால நிலையைச் சுட்டிக்காட்டப் பின்வரும் கோயில்களை உதாரணங்களாகக் காட்டலாம்.


கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அஜய்கார்டின் நாச்னாகுட்டராக் கிராமத்திலுள்ள பார்வதி அம்மன் கருங்கற் கோயிலின் கருவறையின் மீது உள்ள கோஷ்டம் போன்ற இன்னொரு கட்டட ஸ்துாபி அல்லது விமானம் போன்ற அமைப்புக்கு முன்னோடியாக அமைகிறது எனலாம். ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகோரின் புமாரா என்ற ஊரில் உள்ள செங்கற்களிலான சிவன் கோயிலின் கருவறையின் மீதுள்ள சிகரம் சிலமடைந்திருப்பதால் அதன் அமைப்பு எவ்வாறு இருந்த தென்பதை உறுதியாகச் சொல்லமுடியாது. கி பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிஜாப்பூரில் உள்ள ஆய்வுகளேயுள்ள லட்கான் துர்க்கையம்மன் கருங்கற் கோயிலின் கருவறையின் மீது காணப்படும் சிகரம் மேலே உயர உயர குறுகிய போக்கைக் கொண்டுள்ளது. நான்கு மூலைகளிலும் ஆமலக வேலைப்பாடுகளைக் கொண்டும் நான்கு பக்கங்களின் நடுவில் சிறிய பட்டையான வெளித்தள்ளல் காணப்படுகிறது. இவ்வாறான வளர்ச்சிப் போக்கைப் பல ஆலயக் கருவறைகளில் காணக்கூடியதாக உள்ளது.

வட இந்தியாவில் இவ்வாறான போக்கு நாகரமுறைச் சிற்பக் கோயில்கள் தோன்ற வழி வகுத்தன. தட்சினைப் பாகத்தில் வேகரமுறையில் அமைந்த சிற்பக் கோயில்கள் தோன்றலாயின. தமிழ் நாட்டில் வளர்ச்சி பெற்ற கோயில் கட்டிடக் கலை திராவிடமுறை எனப்பட்டது.

வட இந்திய வகைக் கோயில்கள் ஒரு மேடையைப் போன்று கட்டப்பட்டு அதன் மேல் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. தென் இந்திய திராவிட வகைக் கோயில்கள் குறுகிய மேல் தளத்தின் நடுவில் இருந்து மேல் நோக்கி உயர்ந்து செல்கின்றன. காலப்போக்கில் கர்ப்பக்கிரக நிலைகளில் கூடுதலான வேலைப்பாடுகளும் முன்னேற்றமடைந்த கட்டட அமைப்புகளும் உருவாகின. இதிலிருந்து அர்த்தராணம், அர்த்த மண்டபம் உருவாகின. இவற்றின் மேல் கூரை கோள வடிவாகவோ அரைக் கோள வடிவாகவோ அமையப் பெற்றன.

ஆலயக் கட்டக்கலை மலையைக் குடைந்தோ, செங்கல் சுண்ணாம்பு மரம் போன்றவற்றைக் கொண்டு கட்டியோ அல்லது கருங்கற்களால் கட்டப்பட்டோ வளர்ச்சி பெற்று வந்தது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மகேந்திர பல்லவன் குகைக் கோயில் ஒன்று குன்றுகளின் உட்புறத்தைக் குடைந்து கோயில் அமைப்பதோடு குன்றின் வெளிப்புறங்களிலும் கட்டடத் தளிகளைப் போன்று சிற்பங்களைச் செதுக்கி கோயில் அமைப்பித்தான். ஒரே கல்லால் அமைப்பித்த பல்வேறு சிறு சிறு கோயில்கள் மாவல்லபுரத்தில் உள்ளன. கல்லைத் தவிர வேறு ஒன்றையுமே பயன்படுத்தாமல் தனிக் கல்லாலேயே சிற்பக் கோயில்கள் எழும்பின. மாமல்லபுரத்தில் திரௌபதி ரதக்கோயில் ஒரு சிறிய எளிமையான முகட்டைக் கொண்டது. சகாதேவ ரதக் கோயில் முன்னையதைவிட முன் மண்டபமொன்றையும், முகட்டு வேலைப்பாட்டுச் சிக்கலையும் கொண்டதாக அமைந்துள்ளது. அருச்சுன ரதக் கோயில் பல்வேறு வெளிப்புற அமைப்பைக் கொண்ட இரு நிலை முகட்டு விமான அமைப்பைக் கொண்டது. தரும ரதக் கோயில் மூன்று நிலை மாடக் கோயிலை ஒத்தது. பீம ரதக் கோயில் நீள் சதுர வடிவமைப்பில் வண்டிக்கட்டு மேல் விதானமும் கொண்டமைந்துள்ளது. நகுல, சகாதேவ ரதக் கோயில்கள் விருத்தாயமான துாரங்களை மாடங்களாக அமைந்துள்ளன.

பல்லவர் காலக் கட்டடத்தினூடகச் சோழர் காலத்தில் கற்பனை வளமும், நுண்ணிய வேலைப் பாட்டுத் திறனும் அழகுக்கு மெருகூட்ட கோயில் கட்டக் கலையில் அமைப்பு சிக்கல் தன்மை வாய்ந்ததாகப் பரிணாமம் பெற்றது. கோபுரங்கள் திருமதில்கள் பரிவார தெய்வங்களுக்கான ஆலயங்கள் மத்தியில் விமானம் அதற்கு முன்னால் பிரதான வாயிலை நோக்கியவாறு அர்த்த மண்டபம், அதற்கும் முன்னால் மகா மண்டபம், முக மண்டபம், ஸ்தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் என்று விரிவாகியது. தஞ்சைப் பெரிய கோயில் தொடர்ச்சியான பரிணாமத்தில் அக்கால உச்ச நிலையைக் காட்டுகிறது. இங்கு மூலவரின் கருவறையின் மேலெழுந்த விமானமே விசேடம் பெற்று உயர்ந்தோங்கி நிற்கிறது. மற்றையக் கோஷ்டங்களும் தளிகளும் கோபுரங்களும் உருவத்திலும் அமைப்பிலும் முக்கியத்துவம் குறைத்துக் காணப்படுகிறது. பிற்காலச் சோழர் காலத்திலும் பாண்டியர்கள் காலத்திலும் கோயில் அமைப்பின் சிக்கல் தன்மை பெருகி கோபுர வாயில்களில் அமைந்த பெரிய நிலைக் கோபுரங்கள் உயரமாகக் கட்டப்படலாயின. விஜயநகர மன்னர் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் கோயில்கள் சுதை வேலைபாடுகளில் கூடுதலாக அமைக்கப்பட்டன. திருமண மண்டபங்கள், ஆறுகால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் என பல்கிப் பெருகி வந்தன.



ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம்
செட்டியார் தெரு



நகரத்தார் ஸ்ரீ பழைய கதிர்
வேலாயுதர் கோவில்
செட்டியார் தெரு

# THE ROLE OF NATTUKOTTAI CHETTIARS IN SRI LANKA

## (A. THEVARAJAN)

Sri Lanka has been closely associated with many merchant-guilds from South India. Testimony to this fact is found in the Brahmi inscriptions, the earliest lithic records which date from 3rd century B. C. and even chronicles like Mahawansa.

In later periods too there have been merchant guilds with different names. Tisai Ayirattu Ainnrruvar, (i.e Ainnurruvar of the thousand corners.), Kumarakanattar, Nanku Nattar, Nankunattu Perurar, Valanciyar, Manigramam (Vanigramam) etc. are some of those mercantile guilds associated with Sri Lanka. These facts are also testified to by inscriptions, some of them of pre-Chola period. They are scattered throughout Sri Lanka - Anuradhapura, Tissamaharama, Polonnaruwa etc. It is no surprise because Sri Lanka is at the mouth of the Southern tip of India and commercial intercourse with South India is to be expected. An inscription from Hopitigamu near Mahiyangana refers to a Vanigrama (a variation of Manigramam of South India). This guild even had the power to inquire into criiminal offences committed by members of their community. Some of them had built even Buddhist Shrines and made grants to these temples.

The Chettiars are another group of merchant guilds who played key roles in trade activities. Chetti has become sinhalised to Hetti. In many towns we have Chetty Streets or Hettividiyas, and also places called Hettipola (Chettipalayam), Hettiyawatta (Chetti Thottam), Hettimulla (Chetti Moolai) etc. Some of these early settlers of Chettiars in Sri Lanka married Burghers and Sinhalese and became Catholics also. They called themselves Colombo Chetties.

Apart from these Chettiars, there is yet another group called Nattukottai Chettiars. They were the elite of the Chettiars. They were spread throughout South and South-East Asia and even in Mauritius. They came to Sri Lanka too even before the arrival of the Portuguese. Nattukottai Chettiars hail mainly from Ramnad nd Tiruchirappalli Districts of Tamil Nadu - especially from Devakottai and Pudukkottai areas. They were mainly money-lenders or financiers. They helped their agencies to engage in trade, especially rice and spices. Some affluent among them engaged in Pearl fishing also.

During the Dutch period their trade activities were circumvented because the Dutch controlled all internal and external trade. By mid 19th century the Nattukottai Chettiars began to flourish. The Indo-Lanka trade was controlled by them - either they themselves were involved or heavily financed such ventures. Even the internal Trade was in their hands.

Until 1841 the Nattukottai Chettiars were the "Merchant Financiers" or "Merchant Bankers." They were inseparable from the Private Banking activities of the day. The British established the first Commercial Bank in Colombo and was called the Bank of Ceylon with the Headquarters in London, although there was a local board of Directors who were all Britishers. With the Coffee crisis of 1848, this Bank failed. But other British Banks opened Branches in Colombo - to wit, the Oriental Banking Corporation, Bank of Madras etc. As a result, Indo-Lanka trade was financed by these Banks. The role of Nattukottai Chettiars were threatened. But soon, they adjusted themselves and overcame the situation.

The British Bankers were not easily accessible to the natives. Their main concern was to help British ventures - opening new Estates, buying land for ventures of Briti Shers etc. However, the shroff happened to be always a Chettiar. The Shroff played an important role in assessing a borrower's financial capacity for repayment. The Nattukottai Chettiars were able to adduce proof of their worth. They even went to the extent of furnishing referees from Madras through the Bank branches in Madras. Thus they were able to obtain loans from the British-owned and British - managed Banks. they in turn lent money to natives on higher interest. The native who had no access to the British Bankers found salvation in the Nattukottai Chettiars. Thus they played the role of middlemen and secured sufficient profits.

In 1932, the State Council resolved to regularise Banking and money lending systems and appointed a Banking Commission. The Commission in its report published in 1934 paid the highest tributes to the Nattukottai Chettiars.

"The Chettiars formed a distinct link between the banks and the public, freeing the former in a considerable measure from the risk in direct lending and working as a medium between suppliers and seekers of credit. It must be said to their credit that in moving surplus capital from places, both internal and external to the point of requirements, they have contributed in no small measure to the economic development of the Island.

European enterprises relied upon English funds to acquire land and develop them into flourishing estates. The Ceylonese had no such external support or own savings to support them. They turned to the Chettiar and found a ready response. It is gratifying to note that several of the witnesses have paid an ungrudging tribute to the Chettiars' share in the building up of Ceylon, in the absence of which foreign penetration might have been greater and more serious."

It will thus be seen that for at least half-a-century between 1875 and 1925 the Nattukottai Chettiars' financial contribution formed the backbone of the nation's economy and development. The economic depression within the country and economic recession at the global level around 1930 affected the country. Legislations from 1925 onwards diminished the role of these Chettiars. By 1935 their role started receding.

By and large the Nattukottai Chettiars were renowned for their honesty, and integrity. People had absolute faith in them. because there were no Government or Private agencies for saving or safekeeping of money, they deposited their monies with the Nattukottai Chettiars. Money and jewellery were perfectly safe with them - as much as keeping in a Bank Vault. People received a fair interest for monies left with them at the time of withdrawal. that is why Edgar Thurstan said : "Indeed, the good faith and honesty of a Nattukottai Chetty were proverbial." Even Judges of the Supreme court endorsed this view in judgements and took cognisance of their "business morality". They ostracised members of their community who were convicted for criminal offences. They had what is called "Nagarams" to try and settle disputes and other matters. Nagarams were semi-autonomous bodies with wide powers to deal with matters of their communities. The Nagarams had their sittings in Temples which formed the core of their religious and social life.

The Nattukottai Chettiars were highly religious oriented. They lead a frugal life however rich they may be. They are unassuming, and shun publicity. They set apart a percentage of their earnings for religious purposes. They have contributed towards the maintenance and restoration of temples. They have built temples in places where they lived.

Some such temples built in Colombo are the Subramania Temples at Sea Street Chetty street and at Bambalapitiya (Wellawatte border). Every year they went on ***Pada Yatra*** to Kataragama for the Maha Festival in July. Once an epidemic broke-out and this was stopped. Then onwards they celebrate the "Vel Festival" in colombo on a grand scale.

The Present Trustee of the New Kathiresan Temples at Sea Street and at Bampalapitiya Mr. R. M. Palaniappa Chettiar set foot on this soil in 1943 as Manager of the "Chettinad Corporation/Bank. In 1958, he assumed as Chairman of the Board of Trustees which he is holding to this day due to the absolute trust reposed in him. In keeping with the tradition of the Nattukottai Chettiars and being alive to modern needs of Society he built the New Kathiresan Hall with modern facilities for cultural functions. From time to time he had renovated the Temples under his charge. The latest renovation of the New Kathiresan Temple at Bambalapitiya is a crowning success to his devotion. He brought sculptors from India, images of deities from Mahapalipuram and Mithulaipatti and his beloved daughter Mrs. Meenatchy Vinaitheertan brought the Kasilingam from Kasi and donated to this temple. This is an attesting testimony to the long and pious tradition and heritage of the Nattukottai Chettiars.

# விநாயரின் திருவடிவங்களில் சில




### BALA GANAPATI

Bala Ganapati holds a variety of fresh fruits in his hands, including banana, mango, sugarcane and jackfruit, representing the abundance and fertility of the earth.

**பால கணபதி**

*பல்வகைப்பட்ட பழுத்த புத்தம் புதிய தன்மை கொண்ட பழங்களாய கதலி, மாம்பழம், பலாப்பழம் கரும்பு ஆகியனவற்றை ஏந்தியுள்ளார். இவை பூமியினது செழிப்புத் தன்மையையும், நிறைவுத் தன்மையையும் வெளிப்படுத்துகின்றன.*



### TARUNA GANAPATI

Eight-armed, Taruna Ganapati holds a variety of fruits and implements in his hands. His features are brilliant, representing the blossoming of youth.

**தருண கணபதி**

*தருண கணபதி எண்கரங்களுடன் அவற்றிலே பல்லினப் பழங்களையும், ஆயுதங்களையும் தாங்கியிருக்கின்றார். அவனது உடலமைப்பு தேயோன்மயமானது. இது இளைஞரின் மலர்வைக் குறிக்கின்றது.*



### BHAKTI GANAPATI

Shining like the full moon in the harvest season, Bhakti Ganapati is indeed pleasant to look upon. In His four hands He holds a banana, a mango, and (not shown) a pot of *payasam* (a sweet pudding) and a coconut.

**பக்தி கணபதி**

*அரிவிவெட்டுக் காலத்திலே நிலெவறித்து நிற்கும் மழுமதியைப்போல பக்தி கணபதி பார்வைக்கு மனோரம்மியமானவராக இருக்கின்றார். அவரது நான்கு கரங்களிலேயும் கதலிப்பழம், மாம்பழம், ஒரு கலசத்தில் பாயசம் (காட்டபடவில்லை) தேங்காய் ஆகியவற்றைக் கொண்டுள்ளார்.*



## VIRA GANAPATI

Vira Ganapati is a fierce pose. Standing, many-armed, holding every variety of weapon - goad, sword, *shakti*, bow, battle-axe and the like. His presence is commanding and powerful.

### வீர கணபதி

வீர கணபதி கோர நிலையைக் கொண்டவர். நின்ற நிலையில் பல கைகளைக் கொண்டு அவற்றில் பல்வகைப்பட்ட ஆயுதங்களாய அங்குசம், வாள், கத்தி, வில்லு, பரசு ஆகியவற்றைத் தாங்கியுள்ளார். அவரது தோற்றம் சக்தி மிக்கதும் அதிகாரபூர்வமானதுமாக அமைந்துள்ளது.



## SHAKTI GANAPATI

Seated, four-armed, with one of His shaktis seated on His left knee, Shakti Ganapati guards the grihastha (house-holder). He holds the noose and goad.

### சக்தி கணபதி

இருந்த இருப்பில் நான்கு கரங்களைக் கொண்டவராய் அவரது இடது தொடையிலே சக்திகளுள் ஒருவரை இருத்தியிருக்கின்றார். சக்தி கணபதியானவர் கிருகஸ்தனைப் (இல்லத்தவனை) பாதுகாவல் செய்கிறார். அவர் பாசத்தையும் அங்குசத்தையும் ஏந்தியிருக்கின்றார்.



## DVIJA GANAPATI

Sometimes represented with four heads. Dvija Ganapati's implement include a noose, a goad and, according to some texts, a book, a *kamandalu* (water vessel) and weapons.

### திவிஜ கணபதி

சில வேளைகளில் நான்கு தலைகளுடன் காணப்படுகிறார். திவிஜ கணபதியின் ஆயுதங்களாவன பாசம், அங்குசமும் சில நூல்களின்படி, ஏடும் (புத்தகம்) கமண்டலமும் மற்றும் ஆயுதங்களும் அடங்கும்



## SIDDHI GANAPATI

Gold in color, shaded in green, Siddhi Ganapati is often shown with many heads. He holds the *Parashu*(axe), mango, sugarcane and some sweets.

### சித்தி கணபதி

பொன்னிறம் பொருந்தியவர், பச்சை வர்ணமும் பூசப்பட்டவர். சித்தி கணபதியை பெரும்பாலும் பல தலைகளைக் கொண்டவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவர் தம் கரங்களிலே பரசு (கோடரி) மாம்பழம், கரும்பு, இனிப்புப் பண்டங்களை வைத்திருக்கின்றார்.



## UCCHISHTA GANAPATI

Six-armed, holding the pomegranate, lotus, mala, sweets and weapons, Ucchishta Ganapati has a blue complexion and may be shown holding a vina.

### உச்சிஷ்ட கணபதி

ஆறு கரங்களும் மாதுளம்பழம், தாமரை, மாலை, இனிப்புப் பண்டம் மற்றும் ஆயுதங்களையும் தாங்கி இருக்கின்றன. உச்சிஷ்ட கணபதி நீல நிற மேனியர்; சில வேளைகளில் வீணையையும் ஏந்தியிருக்கின்றார்.



## VIGHNARAJA GANAPATI

With features of brilliant gold hue. Vighnaraja Ganapati rides on His vahana, the mouse. Four-armed, He holds His noose and goad, broken tusk and modaka.

### விக்கினராஜ கணபதி

சுடர்விடும் பொன்னிற மேனியைக் கொண்டவர். விக்கினராஜ கணபதி. தனது வாகனமாகிய மூஷிகம் மீது இவர்ந்துள்ளார். நான்கு கரங்களைக் கொண்டு அவற்றில் அங்குசம், பாசம், ஒடித்த மருப்பு, மோதகம், என்பனவற்றைத் தாங்கியுள்ளார்.

## KSHIPRA GANAPATI



A standing *murthi*. Kshipra Ganapati is red-complexioned and highly popular with His devotees. His four hands hold the lotus and tusk-point, noose and goad.

### க்ஷிப்ர கணபதி

இவர் நின்ற முகூர்த்தத்தினைக் கொண்டவர். க்ஷிப்ர கணபதி சிவப்பு நிறம் பொருந்தியவர். பக்தரிடையே மிகுந்த அன்பும், பற்றும் கொண்டவர். அவரது நான்கு கரங்களிலேயும் தாமரை, மருப்பு, பாசம் அங்குசம் ஆகியனவற்றைக் கொண்டுள்ளார்.

## HERAMBA GANAPATI



Five-faced and riding on a lion, this *murthi* of Sri Ganapati holds many weapons and edibles, and offers the *mudras* (gestures) of protection and blessing.

### ஏரம்ப கணபதி

ஐந்து முகம் கொண்டு சிங்கம் மீது இவர்ந்து வருவதாக இருக்கும் ஏரம்ப கணபதியின் கைகளிலே பல்வகையான ஆயுதங்களையும், உணவுப் பண்டங்களையும் காணலாம். அத்துடன் அவரது இரு கரங்கள் அருளலையும், அபயத்தையும் அபிநயிக்கின்றன.

## LAKSHMI GANAPATI



Lakshmi Ganapati is accompanied by His two shaktis and shows a fair complexion. One of His eight hands gives the abhasya mudra. while the other seven hold; a parrot, a pomegranate, a lotus, a pitcher of rubies, a goad, a noose, a wish-fulfilling creeper and a sword.

### லக்ஷ்மி கணபதி

லக்ஷ்மி கணபதி அவரது இரு சக்திகள் இருபுறமிருக்கக் காணப்படுகிறார். அவர் மாநிறம் பெற்றவர் எட்டுக் கரங்களுள் ஒன்றினை அபய முத்திரையாகப் பிடித்துள்ளார். ஏனைய ஏழு கரங்களிலும், கிளி, மாதுளம்பழம், தாமரைப் பூ, மாணிக்கக் கற்களடங்கிய கோளை, பாசம், அங்குசம், விரும்புவனவற்றை ஈந்தருளும் கொடி, வாள், என்பனவற்றைக் கொண்டிருக்கிறார்.

## MAHA GANAPATI




Usually shown accompanied by one of His shaktis on His left, Maha Ganapati is red-complexioned and has eight hands which hold various weapons and fruits.

### மகா கணபதி

இடது புறத்திலே சக்திகளுள் ஒருவரால் அணையப்பெற்று விளங்கும் மகா கணபதியானவர் சிவந்த நிறமுடையவர். எண்கரங்களைக் கொண்டவர். அவற்றிலே பல்வேறு ஆயுதங்களும், பழங்களையும் கொண்டுள்ளார்.

## VIJAYA GANAPATI



Eight-armed, holding various weapons and fruits, Vijaya Ganapati is said to be sitting under a yellow Kalpa-vriksha (wish-fulfilling tree)

### விஜய கணபதி

எண்கரங்களைக் கொண்டவர். அவற்றிலே பல்வகைப்பட்ட ஆயுதங்கள் பழங்களையுடையவர். அவர் மஞ்சல் நிறம் பொருந்திய கற்பகதருவின் கீழ் இருப்பதாக் கூறப்படுகிறது.

## NIRUTTA GANAPATI



A dancing pose, standing on either the right or left leg, this murthi is sixarmed, holding weapons and fruits, and represents lively activity and joy.

### நிருத்த கணபதி

இடது அல்லது வலது காலை ஊன்றியபடி நடன நிலையில் நிற்பவர். இந்த மூர்த்தம் ஆறு கரங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் ஆயுதங்கள், பழங்கள், ஆகியனவற்றை ஏந்தி துரிதப்பாடான செயற்பாட்டினையும், மகிழ்ச்சியையும் பிரதிபலித்து நிற்கின்றன.

**URDHVA GANAPATI**



Seated with one of His shaktis on His left. Urdhva Ganapati is golden-complexioned. six-armed, holding various weapons, fruits, sugarcane and edibles.

**ஊர்த்தவ கணபதி**

தனது இடது புறத்திலே சக்திகளில் ஒருவரை அமர்த்தியவராய் ஊர்த்தவ கணபதி பொன்னிறமேனி கொண்டுள்ளார். ஆறு கரங்களிலும் பல்வகைப்பட்ட ஆயுதங்கள் பழங்கள், கரும்பு, உணவுப் பண்டங்கள் ஆகியனவற்றை வைத்துள்ளார்.

# SYMBOLS OF LORD GANESHA


"His four arms stand for His immense power in helping humanity. The noose and the goad borne in two of His hands stand for His all-pervasiveness and grace. The broken tusk held in the right hand shows that He is the refuge for all. His huge belly is indicative of His tolerance and also signifies that all things, the entire Universe, are contained in him. His feet stand for the bestowal of *siddhi and buddhi*, attainment of desires and knowledge. The *modaka* (sweet goody) in His hand is symbolic of jnana, conferring bliss. His mount, the shrew, represents theworldly desires which are to be overcome." (M. Arunachalam. *Festivals of Tamil Nadu*, 1980 Page 112.)

Various symbols are associated with each of the Hindu gods, symbols which seek to describe the manifested powers of that particular Third World Mahadeva. the *vitarka mudra*, also known as the mudra of debate, is associated with Lord ganesha, as are red and yellow flowers. In this section we describe briefly some of the symbols and their meanings.

Courtesy - **Swami Subramaniya.**




நகரத்தார் ஸ்ரீ புதிய கதிர்
வேலாயுதர் கோவில்
செட்டியார் தெரு




பிரதான வாயிலில்
பொறிக்கப்பட்டுள்ள
கல்வெட்டு

# நன்றி நவிலல்



கோயில் தர்மகர்த்தா திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் ஆலயப் புனருத்தாபனப் பணிகளில் அயராது உழைத்த சகல பணியாளர்களுக்கும், கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் ஆகிய விழாக்களின் போது வருகைதந்த பக்தர்களுக்கும், பிரமுகர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனின் அருட் கடாட்சம் கிடைக்க வேண்டி நன்றி கூறியது.